விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 31 வெள்ளிக்கிழமை (14.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177



RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# மாகாண சபைகளை இணைக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

## தெரிவுக்குழு மூலமே அதற்குத் தீர்வு

(கொழும்பு)

**மாகாண சபைகளை தேவைப்படும் பட்சத்தில் இணைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை இரத்துச் செய்வதென அரசின் அமைச்சரவை முடிபு செய்துள்ளது.**

அரசியலமைப்பின் மாகாண சபை முறைமை உள்ளடக்கிய 13ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய திருத்தங்கள் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைப்பது என்றும் அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற சர்ச் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாளை கிளிநொச்சி விஜயம்

### நிகழ்வுகள் பல ஏற்பாடு

(மல்லாவி)

கண்டி, யாழ்ப்பாணத்திற்கான பிரதான வீதியான ஏ9 வீதியை புனரமைப்பின் பின் சம்பிரதாய பூர்வமாக நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி நகர் பகுதியிலுள்ள நீதிமன்றக் கட்டிடத்திற்கு அண்மித்த பகுதியில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

ஏ9 வீதியானது 2006ஆம் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் போராளி; இலங்கை நீக்கம்

(கொழும்பு)

ஆயுதப் போராட்டத்தில் சிறுவர்களை இணைத்து கொள்ளும் நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது என ஐ.நா. அறிவித்துள்ளது.

ஆயுதப் போராட்டத்தில் சிறுவர்கள் என்னும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கையிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் எந்தவொரு தரப்பும் சிறுவர்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதினால் இலங்கை, சிறு (19ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திடம் கொடுக்காதீர்!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினருக்கு வாக்காளர் பெயர் பட்டியலை கொடுக்கத் தேவையில்லையெனத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாக்காளரின் பெயர் பட்டியலை தம்மிடம் தருமாறு இராணுவத்தினர் தொடர்ந்து கோரிக்கை விடுத்துவருவதாக யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்கள் வடக்கு மாகாண பிரதி தேர்தல் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதப் போராட்டம் பயங்கரவாதம் அல்ல

### அது இன விடுதலைப் போர் – சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடந்தது பயங்கரவாதப் பிரச்சினையல்ல, இது இன விடுதலைக்கான தேசியப்போராட்டம்.

இனப்பிரச்சினையின் வெளிப்பாடுதான் ஆயுதப்போராட்டத்திற்கு காரணம் மாறாக அரசியல்வாதிகளினால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினையல்ல எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத்தின் தேசிய அமைப்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தேசிய நல்லிணக்கம் தேய்மானத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை தமிழ்மக்கள் நிராகரிக்கத் தொடங்கிவிட்டனர்

### பேராசிரியர் றொகான் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் ஆரம்பத்தில் ஆதரவு வழங்கி வந்தனர்.

காலப்போக்கில் பயங்கரவாதத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களினாலும் சொத்தழிவுகளினாலும் விரக்தியுற்ற அவர்கள் பயங்கரவாதத்தை நிராகரிக்கத் தொடங்கிவிட்டனர் என சிங்கப்பூர் இரா ஜரட்ணம் (20ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.நாச்சிக்குடாவில் தமிழர் காணி பறிப்பு

(நாச்சிக்குடா)

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா சந்தியில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலம் பூநகரிப் பிரதேச செயலாளரால் அந்த மண்ணுக்கு உரித்தில்லாத முஸ்லிம்களுக்கும் தனவந்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான அனுமதியோ, காணி உரித்தோ இல்லாத பலர் செல்வாக்கைப் பயன்படுத்தி இக்காணிகளை அபகரித்து மரக்காலை, பேக்கரி மற்றும் மூன்று நிரந்தரக் கட்டடங்களை அமைத்துள்ளனர். ஆனால அப்பகுதி ஏழைச் சிறு வாணிப வியாபாரிகள் தங்களுக்குப் பத்து அடி நிலம் பிடித்து கடை அமைக்கப் போனபோது பிரதேச செயலரினால் தடுக்கப்பட்டுள்ளது. மரக்காலை அமைத்து மின்சாரம் பெறும்வரைக்கும், பேக்கரி அமைத்து நிலம் (20ஆம் பக்கம் பார்க்க)


சேமிப்பு ஒளி
நாளை (15/06/2013) மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.30 வரை யாழ்ப்பாண (ஆஸ்பத்திரி வீதி) கிளையில் இடம்பெறும் விசேட சேமிப்பு ஒளி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
COMMERCIAL BANK
(C-3619)


## வடமாகாண தேர்தல் குறித்து ரணில், மகிந்தவிற்கு கடிதம்

(கொழும்பு)

வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்த அரசாங்கம் தயாராவதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. அது வட மாகாண சபைத் தேர்தல் செப்டெம்பரில் இடம்பெறும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பாகும்.

இதனையிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதோடு இது 2013 மார்ச் 21ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவையில்பிரேரணையை நிறைவேற்றுவதாகும். இந்த பிரேரணையை செயற்படுத்தும் போது மனித உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனத்தின் 21வது சரத்தின்படி செயற்பட வேண்டும். அந்த சரத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப உலகளாவிய மற்றும் சம வாக்குரிமை அடிப்படையில் உண்மையான தேர்தலாகவும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் அல்லது அதற்கு சமமான இலவச வாக்களிப்பு நடைமுறைகள்மூலம்அமைய வேண்டும்.

சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பிலான சர்வதேச பிரகடனத்தில் 25ஆவது சரத்துபடி இந்த அதிகாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகளாவிய மற்றும் சம வாக்குரிமை மூலம் வாக்களிக்க உரிமை இருக்க வேண்டும், இது உணமையான தேர்தலாக இருக்க வேண்டும. இரகசிய (19ஆம் பக்கம் பார்க்க)


பொருத்தமான தொழில் தகைமை இல்லாமல் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க முடியாது!

நாளை உங்களுக்காக நாம் தரும் UK, Australia, Canada, Malaysia, Singapore என விரும்பிய நாட்டுக்குச் சென்று பணம் சம்பாதிப்பதற்கான
வருமானத்துடன் கூடிய
தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு
[உணவு, தங்குமிட வசதி இலவசம்]
25% Discount on SPOT ADMISSION



City & Guilds
aets
UEL University of East London
SkillsMalaysia INVITE
3 in 1

. பயிற்சிக் காலத்தில் 50.000 ரூபா வருமானம்
. பயிற்சி நிறைவில் UK, Australia, Malaysia சர்வதேச தரச் சான்றிதழ்கள்
பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தபின் Work Permit உடன் வேலைவாய்ப்பு
UK, Australia, Canada என விரும்பிய நாட்டில் சட்டபூர்வ...

IELTS, வங்கிப்பண வைப்பு
தூதரக நேர்முகத் தேர்வு } அவசியமில்லை
யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெற்று உடனே பயணிக்கலாம்!

வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
ஜூன் 15 சனி ▸▸ யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்
ஜூன் 16 ஞாயிறு ▸▸ வவுனியா சோலைவனம்
ஜூன் 17 திங்கள் ▸▸ கிளிநொச்சி நண்பர்கள் விடுதி
ஜூன் 18 செவ்வாய் ▸▸ மீண்டும் யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்

பிரவேசம் இலவசம் முற்பதிவுகளுக்கு: 077 36 16 798
இதுவரை 3 அணிகளாக 30க்கு மேற்பட்ட மாணவர்கள் பயணமாகியுள்ளனர்
வெளிநாடு செல்லும் வசதியில்லாத மாணவர்களுக்கு உள்நாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிகரம் தொழில் வழிகாட்டல் ஆலோசனை முற்றிலும் இலவசம்!

சிகரம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(764 பஸ் வழி, DAMRO காட்சியறைக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com இணையம்: www.sikaram.lk
(C-3617)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

12.06.2013 முதல் 18.06.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**மீண்டும் யாழில்** **பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(சி-3869)


# ஐ.தே.கட்சியுடன் பேசமாட்டோம்- ஜே.வி.பி

அரசியலமைப்பிற்கான திருத்தம் பற்றியோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள யாப்பு வரைபு பற்றியோ பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கமெதுவும் இல்லையென மக்கள் விடுதலை முன்னணி நேற்று தெரிவித்துள்ளது.

நாடு இந்தளவு மோசமான நிலைக்கு வந்ததற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்புகூற வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை தற்போது சிக்கியுள்ள அரசியல் மற்றும் பொருளாதார சிக்கல்களிலிருந்து இலங்கையை மீட்பதற்கான ஒரு அர்த்தமுள்ள அரசியல் மாற்று ஏற்பாட்டை முன்வைக்கும் அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சக்தியில்லையென அவர் கூறினார். (செ-11)

# கொட்டகை சரிந்ததில் இரு மாணவர் காயம்



வவுனியா நொச்சிமோட்டையில் அமைந்துள்ள பாடசாலையில் தற்காலிக கொட்டகை சரிந்ததில் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் சித்திர பரீட்சை இடம் பெற்ற வேளையிலே இக்கொட்டில் சரிந்து வீழ்ந்துள்ளது ஆனால் அதிர்ஷ்டவசமாக மாணவர்கள் தப்பியுள்ளனர். இரு மாணவர்கள் மட்டுமே சிறு காயங்களுக்குள்ளானதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (செ-250)

# அடகு நகை பகிரங்க ஏலம்

யாழ்.பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில் 2012 -ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி வரை அடகு வைத்து மீட்கப்படாத நகைகளை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் ஏலத்தில் விடப்படவுள்ளது.

இதற்கமைய மீட்கப்படாத நகைகள் மக்கள் வங்கியின் சுன்னாகம் மற்றும் பருத்தித்துறைக்கிளைகளில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலய முகாமையாளர் அறிவித்துள்ளார். (செ)


## விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் அமைந்துள்ள 2பரப்புக் காணியில் புதிதாக அமைத்த 2கடையும், வீடும் விற்பனைக்கு உண்டு.

*கீரிமலை வீதி விளானில் அமைந்துள்ள கடையும் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0772236014, 0213002442

(3026)

## Optimo group Sri lanka

எமது Optimo group Sri lanka Company க்கு துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் இந்த வருடத்தின் நடுப்பகுதியில் தேவைப்படுகின்றனர்

அனுபவம் தேவையில்லை, நாங்கள் பயிற்சி வழங்குவோம்

முகாமைத்துவ பயிற்சியாளர் · மேற்பார்வையாளர் · அலுவலக உதவியாளர் · கிளை முகாமையாளர் · உதவியாளர்

பயிற்சிக் காலத்தில் 10,000 - 30,000மும் பின்னர் 50,000/= பெறலாம்.+(EPF, ETF, Insurance, Medical) & Permanant Job

Call Now: Jaffna, Kilinochi, Mullaitivu, Vavuniya, Mannar, Chavakachcheri

0778920777, 07151588155, 0217201521 Hot Number:0777009820

(3033)

## வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு

தொ.பே : 021 321 0815,021 567 1540

E-mail : valampuri@yahoo.com, valampurijaffna@gmail.com







## கவலையா? யோசனையா?

வெளிநாடு செல்ல, VISA பெற Sponcer ஓர் பிரச்சினையா?

எங்களைத் தொடருங்கள்!

077 1464525

(3037)

சகல நாடுகளுக்குமான, வேண்டிய தொகையில் Sponcer மிகக்குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்.

## கல்வியாண்டு 2013
## விண்ணப்பம் கோரல்

**(CIMA) CHARTERED INSTITUTE OF MANAGEMENT ACCOUNTANTS – U.K** இன் கற்கை நெறியை யாழ் நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்னகான விண்ணப்பம் கோரப்படுகிறது.

CIMA கற்கை நெறியானது ஐந்து நிலைகளைக் கொண்டது.

1. Certificate Level
2. Operational Level
3. Management Level
4. Strategic Level
5. Top CIMA

*O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் **Certificate** நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

* AAT பூர்த்தி செய்த மாணவர்கள் Operational நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

**Operational** மற்றும் **Management Levels** ற்கான விண்ணப்ப முடிவுத்திகதி **21st June 2013**

விசேட புலமைப்பரிசில்கள் கீழ்க்காணும் பிரிவினருக்கு வழங்கப்படும்.

- உயர்தரத்தில் அதிவிசேட சித்திகள். (கணிதம், விஞ்ஞானம், கலை மற்றும் வர்த்தகப்பிரிவு)
- யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்
- HNDA மாணவர்கள்

மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும், பதிவுகளுக்கும்

**077 372 2104**
**021 221 9422**

**Colombo**
No 35-1/2, Upatissa Road
Colombo 04

**JAFFNA**
No 3-1/2, Sirambiyadi Lane
[ Off stanley Road]
JAFFNA

பரிந்துரைகளுக்கும், முறைப்பாடுகளுக்கும். **0772 555 814**

(சி-3613)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



## ஸ்ரீமதி சுயந்தி கணேசமூர்த்தி

குவலயத்தில் 26.01.1961 — சிவமயத்தில் 17.05.2013

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பின்
தவப்பொருளே! தாரமே! தாயே! தயாநிதியே!
நமைப் பெரிதும் தவிக்கவிட்டுச் சென்றனையே!
சிவனடியில் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி.

பேரன்புடையீர்!

17.05.2013 இல் நித்திய ஜோதியாகி எங்கள் குடும்பச்சுடர் திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் பிரிவால் நாம் பெருந்துயர் கொண்டிருந்த வேளை பல்வேறு வழிகளிலும் (நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தந்தி மூலமும், பத்திரிகை கண்ணீர் அஞ்சலி செய்தியூடாகவும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் ஊடாகவும், மலர் வளையங்கள் வைத்தும், Email ஊடாகவும்) எமக்கு ஆறுதல் தெரிவித்த உங்கள் அன்பு மிகுந்த உள்ளத்து உணர்வுக்கு என்றும் நாம் நன்றிக்கடன்பட்டிருக்கிறோம். பெருந்திரளாக நீவிர் கூடி இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தமையை எண்ணுகையில் எங்ஙனம் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியும் அந்தியேட்டி அழைப்பும் தெரிவிப்பதெனப்புரியவில்லை. காலக்கோலத்தில் செய்வதறியாது நிற்பதனால் உங்கள் ஒவ்வொருவரையும் அன்பும் நன்றியும் நிறைந்த உள்ளக் கரங்களால் உங்கள் கரங்கள் உரிமை பூண்டு அழைக்கின்றோம். பெருமனம் கொண்டு இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி வருகை தர வேண்டும் என்று இறைஞ்சுகிறோம்.

எங்கள் குடும்பத்து ஒளி விளக்கு திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 14.06.2013 கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரன் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் சபிண்டீகரணக் கிரியைகள் 16.06.2013 அன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு எங்கள் இல்லத்திலும் இவற்றைத் தொடர்ந்து இல. 1229 கே.கே.எஸ் வீதி, பூநாறி, மரத்தடி, யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வ மஹால் மண்டபத்தில் மு.ப 11.00 மணிக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். இவற்றில் தாங்களும் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டும் என்று நன்றியுணர்வுடனும் அன்புரிமையுடனும் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி

இல.60, சேர்.பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:- 077 6215500

இங்ஙனம்
திரு.க. கணேசமூர்த்தி (கணவர்)
மற்றும் பிள்ளைகள்
குடும்பத்தினர்.

(சி-3583)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் மிகவும் கெட்டுப் போச்சு சேர்; அந்தக் காலத்தில் எல்லாம் இது மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

இந்த உலகம் மிகவும் முன்னேறியிருக்கிறது சேர்; அடுத்த கிரகத்துக்கே போய் வீடு கட்டலாமா? என்று யோசிக்கும் அளவுக்கு வந்து விட்டோமே! என்று நினைப்பவர்களும் உண்டு.

அது சரி! உண்மையாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா?சற்று நிதானமாக யோசித்து பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வரவில்லையானால் அதற்காக கவலைப்பட வேண்டாம். வாருங்கள் இராம கிருஷ்ணரிடம் போவோம்.

அவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார். ஒரு சிறிய கதை மூலமாக;

"உலகம் நல்லதா? கெட்டதா?" என்று ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார். அதற்கு அந்தப் பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து,

அதற்கு நான் " பதில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஒருகேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்" என்றார்.

" சரி கேளுங்கள்" என்றார் அவர்.

" பூனைக்குப் பல் இருக்கிறதே அது நல்லதா கெட்டதா?" என்று கேட்டார் இவர்.

இதைக்கேட்டதும் அவர் புலம்ப ஆரம்பித்தார்.

" என்னது? நம் உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று நம்மிடமே திருப்பிக் கேட்கிறாரே! என்று யோசித்தார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதன்பின் அந்தப் பெரியவர் அதற்கு விளக்கமளித்தார்.

"ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்ன பதில் வரும்? யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்கிறோமோ அதற்குத் தகுந்த மாதிரித் தான் பதில் வரும்"

பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று அந்தப் பூனைக் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

" எங்கள் அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லால் தான் எங்கள் அம்மா என்னைக் கௌவித் தூக்கிக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு போவார். அது இல்லையென்றால் நான் இல்லை" என்று தான் குட்டிப் பூனை பதில் சொல்லும்.

ஆனால் இதே கேள்வியை ஒரு எலியிடம் கேளுங்கள். அது என்ன சொல்லும்?

"பல்லா அது எமன்! கடவுள் பூனையை படைத்ததோடு விட்டிருக்கக்கூடாதா? அதற்கு பல்லையும் எதற்குப் படைத்தார் குத்தூசி மாதிரி! அந்தப் பல்லின் கொடுமை என்னவென்பது கடிபடும் எனக்குத்தானே தெரியும்" என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப்பூனை பார்க்கின்ற பார்வை ஒரு மாதிரி! எலி பார்க்கிற பார்வை ஒருமாதிரி.

அதேமாதிரித்தான் இந்த உலகம் நல்லதா -கெட்டதா என்று கேட்டால்..." இந்த உலகத்தின் தன்மையைக் பார்க்கின்றவர்களைப் பொறுத்தது அது.

இந்த உலகம் உள்ளவரைக்கும் இதை நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள். கெட்டதென்று சொல்பவர்களும் இருப்பார்கள்.

எப்போதும் சந்தோசமாக இருக்கின்ற இரண்டு பேர் சந்தித்துக் கொண்டார்கள். உங்கள் சந்தோசத்திற்கு என்ன காரணம்? என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விசாரித்துக் கொண் டார்கள்.

" என் அத்தை மகள் என்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அதுதான் நான் சந்தோசமாக இருக்கிறேன்" என்றார் ஒருவர்.

" என்னுடைய அத்தை மகள் என்னை கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அது தான் நான் சந்தோசமாக இருக்கிறேன் என்றார் இன்னொருவர்.இரண்டும் இரண்டு விதமான பார்வை!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்யக் கூடாது

## கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

(கரணவாய்)

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரக் கூடாதென வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கையின் இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில்1987 ஆம்ஆண்டுஇலங்கை அரசியல் அமைப்பில் ஒரு மாற்றம் கொண்டு வரும் பொருட்டு 13 ஆவது திருத்தச் சட்டம் நிறை வேற்றப்பட்டது.

இத்திருத்தச் சட்டத்துக்கு நிர்வாகப்பரவலாக்கலின்மூலம்மாகாண சபைககளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், திவிநெகும சட்ட மூலத்தின்மூலம் தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு செவி சாய்க்காது பதினைந்து அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. அரசாங்கம் இத்துடன் நின்றுவிடாது முக்கிய அதிகாரங்கள் (காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட) பலவற்றை நீக்கி 13 ஆம் திருத்தச் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வர திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

இதன்காரணமாகதமிழ் மக்களைநிரந்தர அடிமைகளாக மாற்றுவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது.

எனவே, இவ் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கண்டிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை தமிழரசு கட்சி உறுப்பினர் த.பரஞ் சோதி கொண்டு வந்தார். இத் தீர் மானத்தை தமிழரசுக் கட்சி முன் மொழிந்தனர். ஏனைய தமிழரசுக் கட்சியினர் வழிமொழிந்தனர். (அ-3-60)

# கொலைச் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை ஊறணி பகுதியில் கடந்த திங்கட்கிழமை கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்ட குடும்பப் பெண்ணின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்களை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊறணி பகுதியில் தனது வீட்டில் தனிமையில் இருந்த வேளை கடுமையாக தாக்கி கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்ட சோதிலிங்கம் தெய்வமலர் (வயது 64) என்ற பெண்ணின் கொலைச் சம்பவம் தொடர்பாக குறித்த பெண்ணின் உறவினர்கள் இருவர் வல்வெட்டித்துறை பாரிய குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் இரு சந்தேகநபர்களையும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-24)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 |
| தக்காளி | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 120 | 120 | 100 |
| கரட் | 160 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 140-180 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 |

# இராசி பலன்

14.06.2013
(சித்திரை 31, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பஞ்சமி காலை 5.55 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 7.55 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாடு திருப்தி தரும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்,

**இடபம்** கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், காலை நேரத்திலேயே சாதிக்கும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** உங்களின் சிறந்த யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**சிங்கம்** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், குடும்பச் சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்

**கன்னி** சுப விரயங்கள் கூடும், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பணப் புழக்கம் அதிகரிக்கும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்** செய்தொழில் மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உறவினர், நண்பர்கள் வலிய வந்து உதவி செய்ய முன்வரலாம், போசன நன்மையுண்டு.

**தனுசு** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலை கள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலனில் ஏற்பட்ட பிரிவுகள் அகலும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் இன்று வரை 450 பேர் இரத்ததானம்

(கரவெட்டி)


பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரை 450 பேர் வரை இரத்த தானம் செய்துள்ளதாக இரத்த வங்கியின் வைத்தியர் ம.வாசுதேவன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இக்காலப்பகுதியில் கடந்த வருடங்களை விடஇவ்வருடம் அதிகளவான குருதிக்கொடையாளிகள் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

இதில் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் , பிரதேச செயலகங்கள் , இராணுவத்தினர் , பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்கள் ஊடாக இரத்ததான முகாம் அமைத்து இதுவரை 300 பேர்வரை இரத்ததானம் செய்துள்ளனர்.

ஏனைய 150 பேர், வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு சமுகமளித்து இரத்ததானம் செய்துள்ளனர்.

மேலும் இவ்வருடத்தின் எஞ்சிய காலப் பகுதியில் குறித்த அமைப்புக்களின் ஆண்டு நிறைவுகள் மற்றும் விளையாட்டுக்களின் இறுதி நிகழ்வுகளில் இரத்ததானம் வழங்கல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(அ-3-24)



நன்றி:-மிரர்

# ஆலயத்திற்குள் நுழைந்து விசமிகள் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் நல்லாயன் தேவாலயத்துள் இனந்தெரியாத மர்ம நபர்கள் உள்நுழைந்து தேடுதல் நடத்தியதாகவும் சில பொருட்களை சேதப்படுத்தியதாகவும் தேவாலயத்தின் பங்குத் தந்தையால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை பூட்டப்பட்டு இருந்த கதவினை திறந்து கொண்டு தேவாலயத்தினுள் நுழைந்த நபர்கள் அங்கிருந்த பொருட்களையும் சேதப்ப டுத்தியுள்ளனர்.

இவ்வாறு உள்நுழைந்த இனந்தெரியாத மர்ம நபர்கள் தொடர்பிலும் தேவாலயத்தில் காணப்பட்ட பொருட்களை சேதப்படுத்தியமை தொடர்பாகவும் சுன்னாகப்பொலிஸ் நிலையத்தில் பங்குத்தந்தை அருட்பணி இ.ராஜ்குமாரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

# இளைஞர் கழகங்களுக்கான தடகளப் போட்டிகள் நாளை

(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

இதற்காக விளையாட்டுக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் கழக விதிமுறைக்கமைவாக இரு வயதுப் பிரிவுகளில் போட்டிகள் இடம் பெறவுள்ளன. 13 தொடக்கம் 20 வயதுக்குட்பட்டவர்கள் ஒரு பிரிவாகவும் 21 தொடக்கம் 29 வயதிற்குமிடைப்பட்டவர்கள் வேறு பிரிவாகவும் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

இதன்படி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு இரு வயதுப் பிரிவின் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டமும் பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டமும் இடம் பெறவுள்ளன.

மதியம் ஒரு மணிக்கு தெரிவுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதன்படி இரு வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த இருபாலாருக்குமான 100 மீற்றர், தட்டெறிதல், குண்டு போடுதல், நீளம் பாய்தல், 400 மீற்றர், ஈட்டியெறிதல், 800 மீற்றர், 200 மீற்றர், முப்பாய்ச்சல், ஆயிரத்து 500 மீற்றர் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இருவயதுப் பிரிவுகளையும் சேர்ந்த இருபாலாருக்குமான வேகநடைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

100 மீற்றர், அஞ்சலோட்டம், உதைபந்தாட்ட இறுதியாட்டம் ஆகியவை இறுதி நிகழ்வின் போது இடம்பெறவுள்ளன.

நெடுந்தூர நிகழ்வுகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் மருத்துவப் பரிசோதனை அறிக்கை சமர்ப்பித்தல் கட்டாயமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பிரதேச சம்மேளனத் தலைவரை அல்லது இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரை 0777574564 மற்றும் 0771641413 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-23)

# குளவி கொட்டியதில் மூவர் வைத்தியசாலையில்

(கரவெட்டி)

நாகர்கோவில் பெரியதம்பிரான் ஆலயத்தில் ஆலய வழிபாடு இடம்பெற்றவேளை திடீரென பூசகர் மற்றும் பல பக்தர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

இதில் மூன்று பேர் பலத்த குளவிக் கொட்டுக்கு இலக்காகி சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நாகதம்பிரான் ஆலயத்தில் சதுர்த்தி பூசை வழிபாட்டின் போது இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் கரவெட்டியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கமலாம்பிகை (வயது 63), முருகேசு மயூரி (வயது 24), குடத்தனையை சேர்ந்த முருகர் சிவசிதம்பரப்பிள்ளை (வயது 78) ஆகிய மூவருமே சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-3-24)

# பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

திருமுறை பண்ணிசை வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இவ்வகுப்புகள் வியாழக்கிழமைதோறும் மாலை 4.30 மணிக்கு தாவடி வடக்கு வன்னிய சிங்கம் வீதியிலுள்ள இராமகிருஷ்ண விவேகானந்த சேவாச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வட இலங்கை சங்கீத சபையினரதும், அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரதும் பண்ணிசைப் பரீட்சை பாடவிதானங்களுக்கு அமைவாகவே கலாபூஷணம் ஆர். திருஞானசம்பந்தனால் மேற்படி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. (அ)

# மலசலகூடங்களை அமைத்து தாருங்கள் மக்கள் கோரிக்கை

புன்னாலைக் கட்டுவன் திடல்புலம் ஜே/208 கிராம சேவையாளர் பிரிவு மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அல்லற்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த கிராமத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 25 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் கடந்த 1990 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை அவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, இம் மக்களுக்கு மலசல கூடம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளது.

எனவே ,துறைசார்ந்த அதிகாரிகள் தமது அவலநிலையை கருத்திற் கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்பதே அப் பகுதி மக்களின் வேண்டுகோளாகவுள்ளது. (அ-3-60)




# ஆடுகள் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் கிழக்கில் உள்ள இந்து மத பூசகரின் வீட்டில் 2 ஆட்டுக்கடாக்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த 9 ஆம்திகதி இடம் பெற்றுள்ளது.

50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்டுக்கடாக்களே இரவு கட்டியிருந்த இடத்திலிருந்து திருட்டுப்போயுள்ளன.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ-3-60)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவுஸ்திரேலியாவின் தெற்காசிய விவகாரங்களுக்கான ஆலோசகர் நேற்று முன்தினம் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை அவரது இல்லத்தில் சந்தித்த போது... (படம் :-எஸ்.ஆர். கரன்)

# மாணவர்களுக்கான மூக்கு கண்ணாடி வழங்கல்

சுகாதார அமைச்சினால் Vision 2020 திட்டத்தினூடாக யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அரச பாடசாலைகளில் தனியார் நிறுவனங்களின் மூலம் மாணவர்களிடம் பணம் அறவிடப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும் திட்டத்தை பாடசாலை அதிபர்கள் உடன் நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் பொது சுகாதார பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு அவர்களுள் பார்வைக் குறைபாடு உடையவர்கள் என இனங்காணப்படும் மாணவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை பிரிவைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் மீள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது.

இத்திட்டம் தற்போதும் நடைமுறையிலுள்ளதால் இச்சேவை கிடைக்கப் பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு சேவையை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சியின் யாப்பு தொடர்பில் ஐ.தே.கவுடன் பேச்சு நடத்த தயார்

## மு.கா.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி முன்வைத்துள்ள உத்தேச அரசியல் யாப்பு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொது செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பகிர்வு, நிறைவேற்று அதிகார பரவலாக்கல் உள்ளிட்ட விடயங்களைக்கொண்டதாக ஐக்கிய தேசியக்கட்சி தனது உத்தேச அரசியல் யாப்பை அறிமுகம் செய்துள்ளது.

தமது கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இந்த அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த அரசியல் யாப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட ஹசன் அலி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த தமது கட்சி தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி இதுவரையில் தங்களை அணுகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையும் சைபர் தாக்குதலுக்குள்ளாகலாம்

சைபர் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணி வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் முதனிலை வைரஸ் எதிர் கணனி மென்பொருள் உற்பத்தி நிறுவனமான கெஸ்பர்ஸ்கை நிறுவனம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கணனி பயனர்கள் அதிகளவில் சைபர் தாக்குதல்களுக்கு இலக்காவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சைபர் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய உலகதர வரிசையில் இலங்கை எட்டாம் இடத்தை வகிக்கின்றது.

51 வீதமான கணனிப் பயனர்கள் சைபர் தாக்குதல்களினால் பாதிக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் 15 வீதமான மக்கள் இணையத்தை பயன்படுத்தி வருவதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

## கல்யாணமாலை அறிவித்தல்

கோவை ஒழுங்குபடுத்தல்கள் காரணமாக 16.06.2013 தொடக்கம் 19.06.2013 வரை கல்யாணமாலையின் அனைத்து செயற்பாடுகளும் நடைபெறாது என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.


முகாமைத்துவ பீடம்.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்:விசாகம் 4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L வியாபாரம்,கமம்<br>தொ.இ:B1999 | பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்:அத்தம் 3<br>உயரம்: 5'4" 12 இல் செவ்<br>கி.பா:19.5<br>தகைமை/தொழில்: BSc சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ:G716 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்:பூரட்டாதி1<br>தகைமை/தொழில்: பல்மருத்துவர்<br>தொ.இ:B2000 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 32.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CollegeBSc Student ஆசிரியை<br>தொ.இ:G717 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 36<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, உயர் தொழில்நுட்ப கல்லூரி கட்டட ஒப்பந்தகாரர்<br>தொ.இ:B535 | பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா:19.5<br>உயரம்:5' 2இல் சூ,செவ்<br>தகைமை/தொழில்:B.Com, HNDA ஆசிரியை சைவபோசனம்<br>தொ.இ:G719 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 47<br>உயரம்: 5'9" 1,இல் செவ்<br>தகைமை/தொழில்:BSc,MScUK Work Permit<br>தொ.இ:B536 | பிறப்பு: 1971 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா:12.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L, Cqllege, HNDEஆசிரியர் விவாகரத்தும் விரும்பத்தக்கது<br>தொ.இ:G720 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


# சிட்டிவேரம் கண்ணகையம்பாளின் தேர்த் திருவிழாவின் பக்திப் பரவசத்திலிருந்து நான் இன்னும் விடுபடவில்லை..







**08.06.2013,சனிக்கிழமை வரணி சிட்டிவேரம் கண்ணகையம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற தேர் உற்சவத்தில் இருந்து பார்த்ததும் கேள்விப்பட்டதும்..**

நான் காலை 9.00 மணியளவில் ஆலயத்தை வழிபடச்சென்றேன். அப்பொழுது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கே நாலாபக்கங்களிலிருந்தும் வந்த வண்ணமிருந்தார்கள். ஆலயத்தின் முழு இடங்களிலும் அடியார்கள் பக்திப்பரவசத்துடன் பறவைக் காவடி. தூக்குக்காவடி. பாற்காவடி. பாற் செம்பு. கற்பூரச் சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக ஆலயத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் வந்துகொண்டிருந்தனர்.

வரணி ஒரு கிராமம்.சைவசமயத்தின் பிறப்பிடம் என்றே சொல்லலாம். அங்கே சிட்டிவேரம் என்ற இடத்தில்தான் அம்பாள் குடியிருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். ஆலயத்தின் அமைவிடத்தை நோக்கினேன். அம்பாள் திருத்தலம் பயன்தரு மரங்களும் புனித விருட்சங்களும் நிறைந்த பசுஞ்சோலையின் மத்தியில் கம்பீரமாகக் காட்சியளித்தது. அவ்வூர் மக்கள் சைவசமய கலாசாரத்தைப் பின்பற்றி அந்த ஆலயத்திலே நம்பிக்கையுடன் நடந்து கொள்வதை என்னால் காணக்கூடியதாக இருந்தது. சுமார்10.00மணியளவில் சிட்டிவேரம் கண்ணகையம்பாள் ஆலயத்தை விட்டு வெளியே தேரேறி பவனிசெய்வதற்காக ஆலயத்தொண்டர்கள் அம்பாளின் திரு வுருவத்தை தோளில்தாங்கி வருவதும் அதற்கு முன்னால் பல தவில் நாதஸ்வர வித்துவான்கள் இசைவாசிக்கவும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் யுவதிகள் கற்பூரச் சட்டி ஏந்தி கும்பிடும் காட்சியையும் அதற்கப்பால் அங்கப்பிரதிஷ்டை செய்பவர்களும் பறவைக் காவடி எடுப்பவர்களும் பாற்செம்பு ஏந்திவருபவர்களும் சுமார் 5000பேர் வரை அப்படி நிற்பதை நான் கண்டேன்.

தேரிலே சுவாமி ஏறி தொண்டர்கள் ஆரவாரமாக தேர் வடத்தைப் பிடித்து நிற்க மேலேயிருந்து உலங்கு வானூர்தி பறந்து வந்தது. அரசுக்குச் சொந்தமான அந்த உலங்கு வானூர்தி வருவதைக்கண்ட பக்தகோடிகள் பரவசத்துடன் "அரோகரா" சொல்லி சிட்டிவேரம் ஆலயமே அதி ரத்தக்கதாக கோஷமிட்டனர். வந்திருந்த உலங்கு வானூர்தி தேரேறிய அம்மனை சுற்றிவந்து சிலநிமிடங்கள் வானத்திலே தரித்து நின்று அங்கிருந்து அம்பாள் மீது மலர்களைச் சொரிந்தது.அம்பாளை நோக்கி மலர் சொரியப்பட்டதும் மக்கள் அனைவரும் விண்ணை நோக்கி கண்ணீர் மல்க வணங்குவதை என்னால் காண முடிந்தது.

அப்பொழுது தேர் அசையத்தொடங்கியது .அங்கே நானும் தேருடன் இணைந்து நடந்து வந்தேன்.அங்கே சிலர் எனக்கருகில் இருந்து பேசுவதை என்னால் கேட்கக்கூடியதாக இருந்தது.பிரசித்தி பெற்ற மூர்த்தியுள்ள தெய்வம் என்றும் அதற்காக அவ்வூர் மக்கள் திருவிழாக் காலங்களிலே விசேட பூஜை நேரங்களில் அங்கு வரும் அத்தனை அடியார்களுக்கும் அன்னதானம் வழங்கும் பெருந்தன்மை கொண்டவர்களாக இருந்தனர். வரணியிலே பல குறிச்சிகள் இருந்தாலும் ஒவ்வொருவரும் தங்களுடைய ஆலயம் என்ற உணர்வுடன் பங்கு கொள்வதை அவதானித்தேன். உதாரணமாக அன்னதான மடத்திற்கு சென்றால் சாதி. சமூக வேறுபாடின்றி அனைவரும் சமம் .அனைவரும் அடியார்கள். அனைவரும் வரணி மக்கள் என்ற உணர்வுடன்நடந்துகொள்வதை காணக்கூடியதாக இருந்தது.

அந்த ஊரிலிருந்து புலம்பெயர்ந்து பல்லாயிரக் கணக்கானோர் வெளிநாடுகளிலிருந்தாலும் சிட்டிவேரம் அம்பாளை மறப்பதில்லை என்பதற்கு அங்கே வழங்கும் அன்னதானங்களும் முழுநேரமும் சம்பளமில்லாத தொண்டர்களாகப் பணிசெய்யும் ஊர்மக்களும்.அதுமட்டுமல்ல இரவு அலங்காரத்திருவிழாக்களும் நடைபெற்றதை யும் அறிந்தேன். சீர்காழி கோவிந்தராஜன் முதல் தென்னிந்தியக்கலைஞர்கள். பாடகி நித்தியஸ்ரீ வரை அத்தலத்திற்கு வருகை தந்து தலத்தைப் பற்றிப்பாடி பெருமை சேர்த்துள்ளனர்.

எனினும் எத்தனை நாதஸ்வரவித்துவான்களும் வரலாம். எத்தனை பாடகர்களும் வரலாம். ஆனால் உலங்கு வானூர்தி வருவதென்றால் ராம் அண்ணை தான் வரவேண்டும் எனவும் பேசிக்கொண்டார்கள்.

அதேபோல் இன்னொரு குழுவினர் இத்தனை சிறப்புக்கள். அலங்காரங்கள் கண்ட அம்பாளின் முழுமையான கடாட்சத்தைப் பெற்றவர் தேசமானிய M.T.S.இராமச்சந்திரன் என்றும். சர்வதேச சட்ட ஆலோசகராக இந்து. பௌத்த கலாசாரப் பேரவையின் செயலாளராக இருந்தாலும் ஜனாதிபதியின் நேரடி அன்புக்குரியவராக இருந்தாலும் தேர் உற்சவத்திற்கு வருடா வருடம் வருகை தந்து மாண்புமிகு ஜனாதிபதியின் அனுமதியுடன் உலங்கு வானூர்தியைப் பெற்று அதற்கான எரிபொருள் அனுசரணையை தனது செலவில் வழங்கி அவ்வூர் மக்களை மகிழ்ச்சிப்பரவசத்தில் ஆழ்த்துகிறார்.அவர்தான் ராம் அண்ணை என்றும் அவரால் மட்டும்தான் உலங்கு வானூர்தியை வரவழைக்க முடியும் எனவும் கூறிக்கொண்டனர்.

அத்தகைய ஊர்ப்பற்றுள்ள திரு.M.T.S. இராமச்சந்திரன் தேர்த்திருவிழாவிலே அவரிடமிருக்கும் வெளிகௌரவங்களை விட்டு அன்றையதினம் சாதாரண மக்களில் ஒருவராக தொண்டனாக வணங்குவதையும் மக்கள் அனைவரும் மகிழ்வுடன் கூறிக்கொண்டனர். இவர் தனது ஊருக்காக அம்பாள் கடாட்சத்தைப் பெற்று மேலும் வளரவேண்டுமென்பதையும் பக்தர்கள் கோஷமிட்டு அம்பாளை வணங்கிக்கொண்டனர். இவ்வாறான ஒரு சம்பவத்தை எனது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நாளாகப் பார்க்கிறேன்.

"மேன்மை
கொள் சைவநீதி
விளங்குக
உலகமெல்லாம்"



பூங்கோதை,
வடமராட்சி.

(சி-3611)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனங்களில் வெள்ளிதோறும் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

அரச நிறுவனங்கள், திணைக் களங்கள், சபைகள், அமைச்சுக்கள் மற்றும் பாடசாலைகள் அடங்கலாக அரசாங்க நிறுவனங்களிலும் வெள் ளிக்கிழமை தோறும் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடு க்க சுகாதார அமைச்சும் பொது நிர்வாக அமைச்சும் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பில் அமைச்சரவை அனுமதியைப் பெற்று விசேட சுற்று நிருபமொன்றை வெளியிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமை ச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, டெங்குநோய் ஒழி ப்பு தொடர்பாக முப்படை மற்றும் பொலிஸாருக்கு பயிற்சி வழங்கும் விசேட திட்டமொன்றையும் சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் ஆரம் பித்துள்ளது.

இதன் கீழ் 200 பேருக்கு பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மழையுடன் கூடிய காலநிலை கால நிலை காரணமாக டெங்கு நோய் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட் டுள்ளது.

இந்நிலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு சகல தரப்பின ரையும் இணைத்து செயற்படுவது குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அரச நிறுவனங்களில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து அரச அதிப ர்கள் மற்றும் கிராம உத்தியோகத் தர்களின் பங்களிப்புடன் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

அரச நிறுவனங்களில் டெங்கு பரவும் இடங்கள் அதிகளவில் காண ப்படுவதால் பிரதி வெள்ளிக்கிழமை களில் சகல அரச நிறுவனங்களி லும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டுமென இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

டெங்கு பரவுவதைத் தடுக்க சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசி யம் என்பதால் பொது நிர்வாக அமைச்சு மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களினூடாக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து முன் னெடுக்கவும் அது குறித்து வாராந் தம் பொது நிர்வாக அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் திட்டமி டப் பட்டுள்ளது.பாடசாலைகளில் டெங்கு பரவும் இடங்களை ஒழிக்கும் நடவ டிக்கை கள் இந்த வாரம் முதல் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. வாரத்தில் ஒரு நாள் சகல பாடசாலைகளிலும் டெங்கு பரவும் இடங்களை ஒழிக்க சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் தீர்மா னித்துள்ளன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை சுகாதார அமைச்சினால் தனியாக முன்னெடுக்க முடியாமையால் பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் விசேட அதிரடிப்படை சிவில் பாது காப்புப் பிரிவு என்பவற்றின் உத வியை பெற்று வருவதாக சுகாதார சேவைப் பணிப்பாளர் பாலித மஹி பால தெரிவித்தார். (அ-2)

# புத்தர் சிலை நிறுவும் விவகாரம்; ம.உ. ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு மாநகரசபைக்குட் பட்ட பிள்ளையாரடி சந்தியில் புத்தர் சிலை நிர்மாணிக்கும் விவகாரத்தை மட்டு. மங்களராமய விஹாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவ னத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன் தினம் எழுத்து மூலமான முறை ப்பாடொன்றை விஹாராதிபதி அம் பிட்டியே சுமணரத்ன தேரர் தன்னி டம் கையளித்துள்ளதாக மட்டக்கள ப்பு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் இ.மனோகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் 29 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், பிரதேச மக்களும் இணைந்து புத் தர் சிலை நிறுவுவதற்கு எதிர்ப்பு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டு இதற்கான நட வடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, இவ்விவகாரம் பொலிஸாரினால் நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டது.

குறித்த இடத்தில் புத்தர் சிலை நிறுவுவது தொல்லையையும் சமூக அமைதிக்குப் பங்கத்தையும் ஏற்ப டுத்தும் என பொலிஸார் தமது அறி க்கையில் குறிப்பிட்டதன் பேரில் புத்தர் சிலை வைப்பதற்கு தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டிரு ந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வஞ்சகம் நிறைந்த அரசு

## கடுமையாக சாடுகிறார் சிறிதுங்க

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர் தலை நடத்தாது இருப்பதற்கு அரசாங்கம் வழமையாக செயற் படுவதைப் போன்று பல நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்ற தென சோசலிஷக் கட்சியின் தலை வர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநா ட்டில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அரசாங்கம் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தாது என்பது புரி கின்றது. இது வெறும் கண்துடைப்பு நாடகமாகும்.

ஏனைய மாகாணங்களில் இடம் பெற்ற தேர்தலை போன்று வடக்குத் தேர்தலையும் நடத்துமாறும் அவ் வாறில்லாது போனால் எமது நாட் டுக்கு அபகீர்த்தி ஏற்படும் எனக் கோரி அரசாங்கத்திற்கு கத்தோலிக்க ஆயர் கள் பேரவை கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

கடந்த 25 வருட காலமாக அமு லில் உள்ள மாகாணசபை முறை மையை இல்லாதொழிக் குமாறு அரசாங்கத்தில் உள்ள அமைச்சர் கள் கூக்குரல் போடுகின்றனர். இவர் களை வைத்தியசாலைக்கோ அல் லது அங்கொடைக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தில் பொய், இல ஞ்ச ஊழல் மற்றும் வஞ்சகம் நிறை ந்துள்ளது. அதனை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண் டும் என அவர் மேலும் தெரிவித் தார். (அ-2)

# ரணிலின் வாகனம் மீது தாக்குதல்; விசாரிக்க பொலிஸ்குழு அமைப்பு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மீதான தாக்கு தல் தொடர்பில் விசாரணை செய் வதற்காக மூன்று பொலிஸ் குழுக் கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பிரிவின் அறிக்கையில் தெரிவி க்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதியன்று ரணில் விக்கிரமசி ங்க உள்ளிட்ட தரப் பினர் பலப்பிட்டிய பகுதியில் பிரசாரத்துக் காக சென்றிருந்த வேளையிலேயே இந்தத்தாக் குதல் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதேவேளை மக்க ளின் எழுச்சியை இவ்வாறான அநா கரிகமான செயற்பாடுகளின் மூலம் அரசாங்கம் கட்டுப்படுத்த முயற்சிப்ப தாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி யின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க விடுத்துள்ள அறி க்கையில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ-2)

## 14 பேருக்கு சர்வதேச பிடிவிறாந்து

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகம் தொட ர்பாக 14 இலங்கையர்களுக்கு சர்வ தேச பொலிஸ் பிரிவினர் சர்வதேச பிடியாணை பிறப்பித்துள்ளனர். இவர்களில் சின்னையா குணசே கரன், சுனில் காமினி ஆகிய இருவ ருக்கு எதிராக நீதிமன்றமும் பிடியா ணையைப் பிறப்பித்துள்ளது.

இந்தப் போதைப்பொருள் வர்த்த கர்களில் சிலர் இந்திய பொலிஸா ரினால் தேடப்பட்டு வருபவர்கள் வை.சகாயதேவன், பீ.கிருஷ்ணன், வின்சன்ட் வில்சன், நிமால், சண் முகம், ஆர்.ருத்ரகுமார், எஸ்.பாலன், டி.தயாலன், எல்.நிஹால், எஸ். தலை மகம் ஆகியோருக்கு எதிராகவே சர்வதேச பொலிஸ் பிரிவினர் பிடிவி றாந்து பிறப்பித்துள்ளனர் என்ப தும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

## இன்று ஆறாம் திருவிழா

### தீராவினை தீருமம்மா

கடலலை தாலாட்ட – அடியவர்
காவடி எடுத்தாட
சர்ப்பம் குடைபிடிக்க– அன்னை
சஞ்சலங்கள் போக்கிடுவாள்
நயினைப் பதியுறைந்து
நம்பினோர் குறை தீர்த்து
திரைகடல் தாண்டி வருவோர்க்கு
தீராவினை தீர்க்கின்றாள்.

மு.கேசவன், தொல்புரம்.

### குறைகளை களைந்திடம்மா!

அலைகடல் சூழ் ஆலயத்தில் அமர்ந்துறையும் அன்னையே
தலைமேல் நாகபடம் தாங்கும் தயாபரியே
மலை போலும் இன்னல்களை மண்ணாக்கும் மாதரசி
கலைகள் போற்றிடும் கருணைக் கற்பகமே
நாத இசையில் மயங்கும் நாகசர்ப்ப மீதினிலே
வேத மந்திரங்கள் ஒலிக்க வீதி வலம் வந்திடுவாய்
பாத கமலம் பணிந்து பக்தியுடன் பணிவோர்க்கு
பேத மில்லா வாழ்வளித்துப் பெருங்குறைகள் தீர்த்திடுவாய்

தென்கோவை, விசாகஜன்

### வேதனைகள் போக்கிடுவாய் நயினைத் தாயே

எங்கள் வேதனைகள் தீரவில்லை யென்று
சொல்லி அழுவதற்கு கடல் தாண்டி ஓடிவந்தேன்
அம்மா தாயே
பாம்பினை பஞ்சணையாய்க் கொண்டவளே
எங்கள் துயரங்கள் யாவும் உனைப்பார்த்தவுடன்
சூரியனைக் கண்ட பனிபோல் நீக்கி
எமைக் காத்து அருள் பாலிப்பாய்
பராசக்தியே

ஶ்ரீ. பிரதீப், திருநெல்வேலி

### நின்னருளை தா தாயே!

ஆதிசிவன் தேவியே அலை கடலில் எழுந்தவளே
மேதினியில் புகழ் பூத்த நயினையிலே கோயில் கொண்டாய்
தென்றலோடு கடலலைகள் தாலாட்டும் நயினையினை
தீந்தமிழில் இசை பாட வைத்தவளும் நீயம்மா
ஐந்து தலை நாகம் படம் விரித்து நிழல் பிடிக்க
அதன் கீழே அருள் வடிவாய் கொலுவிருக்கும் நாகேஸ்வரி
அங்கம் எங்கும் நகையணிந்து எழிலுடனே நீ திகழ்வாய்
சிங்கம் மேல் நீ அமர்ந்து சிரித்தபடி அருள் தருவாய்
தெங்கம் பொழில் சூழ்ந்த பெரும்கோயிலிலே எழுந்தருளி
வங்கம் மலி சூழ் நயினை வீதியிலே வலம் வருவாய்
வல்வினை நோய் வந்த போது உன்னடியை நாடுகிறோம்
தொல் வினைகள் போக்கி நிதம் தூயவளே துயர் துடைப்பாய்
பாதிமதி வேணியனாம் பரமன் அருகில் உறைபவளே
நீதி வழுவாது நின்று நின்னருளை தா தாயே.

செல்வம் பவானந்தமூர்த்தி, இணுவையூர்.

கஜமுகன் ஹாட்வெயர்

147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2833
021 222 9733
Fax-021 222 2368
E.mail- kajamuganhw@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சியே முதலில் யுத்தத்தை ஆரம்பித்தது

## பிரதியமைச்சர் முரளிதரன் சாடல்

(கொழும்பு)

இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியே முதலில் யுத்தத்தை ஆரம்பித்தது.' அதனை முடித்து வைத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அலரிமாளிகையில்ரன்பிமகாணி உறுதிப்பத்திரம் வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் ஆயிரக்கணக்கானோர் யுத்தத்தினால் கொல்லப்பட்டுள்ளனர். அந்த யுகத்துக்கு முடிவு கட்டியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என குறிப்பிட்ட அவர் இப்போது நாட்டில் ஒரு வெடிச்சத்தமோ குண்டுச் சத்தமோ கேட்பதில்லை எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் மஹிந்தராஜபக்ஷவைத் தவிர ஏனைய கட்சித் தலைவர்கள் அனைவரும் செல்வந்தர்களே. அதனால் தமது இலாபத்திற்கும் வியாபாரத்திற்கும் அரசாங்கத்தை விமர்சிப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

சாதாரண ஏழ்மை நிலை மக்கள் பற்றி நாட்டுத் தலைவர்கள் எவரும் சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்தித்துச் செயற்படும் ஒரே தலைவர் மஹிந்த ராஜபக்ஷவே. அதேவேளை உலகில் எந்த நாட்டிலும் மக்களுக்கு இலவசமாகக் காணி வழங்கப்படுவதில்லை. அவ்வாறு வழங்கும் நாடு இலங்கை மட்டுமே.

மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் காணியற்ற மக்களுக்கு காணி வழங்குவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியின் கீழ் இதுவரை ஒரு இலட்சம் பேருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் வடக்கு கிழக்கில் 2 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

வடக்கு கிழக்கிலுள்ள காணி அலுவலகங்களில் அதிகாரிகள் இல்லாத நிலை இருந்தது. நான் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவரோடு கலந்துரையாடியதால் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரண்டு காணி அலுவலகங்களை அமைக்க முடிந்துள்ளது. இதன் மூலம் பல்வேறு காணிப்பிரச்சினைகள் தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றன.

யுத்தத்தை நிறுத்துமாறு அன்று உலகின் பல நாடுகளின் தலைவர்கள் ஜனபதிபதிக்கு அழுத்தங் கொடுத்தனர். அவர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கே முக்கியத்துவம் கொடுத்தார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர் என்ற வகையில் இன்று உலக நாடுகள் அவரை வியப்புடன் நோக்குகின்றன எனவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)




ஸ்ரீ ஜெய நீராவி

வீரகத்தி விநாயகர் ஆலயம்

இன்று மூன்றாம் திருவிழா

திருக்காட்சி தந்தருள்வாய் கஜமுகனே

ஓங்கார முதற்பொருளே ஓம்சக்தி கணபதியே!
உன்நாமம் உச்சரிக்க எந்நாளும் இனிப்பவனே!
ஆங்கார மழித்தே எமக்கு நல்வாழ்வு தரவேண்டும்
ஆனைமுகத்தவனே ஞானமுதல்வனே சுமுகனே
பாங்கான பதமளித்துப் பரகதியில்நாம் இன்பமுற
அருள்வேண்டித் துதிக்கின்றோம் ஐங்கரனே வருக!
தீங்கான அனைத்தையும் உன் திருவருளால் அகற்றியே
திருக்காட்சி தந்தருள்வாய் திருவடி சரணம்! சரணம்!!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்


# காணாமல் போன மீனவர்களை தேடும் பணிகள் தொடர்கின்றன

## இதுவரை 59 பேர் உயிரிழந்துள்ளனர்

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடந்த சனிக்கிழமை வீசிய பலத்த காற்றினால் காணாமற்போன 17 மீனவர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் கரையொதுங்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கரையோர பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த கடற்படையினர் தற்போது ஆழ்கடல் பகுதியில் தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சூறைக்காற்றுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை தற்போது வரை 59 என கணிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 30 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தம் ஏற்பட்டு நான்கு நாட்களாகியுள்ள நிலையில் காணாமல் போயுள்ள எஞ்சியுள்ள மீனவர்களும் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற் போனவர்களைத் தேடும் வேட்டையில் இலங்கை விமானப்படையும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை நேற்று முன் தினம் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டு காலி கராப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (அ)

# யாழ்ப்பாணத்தில் 1128 ஹெக்ரயர் நிலப்பரப்பில் திராட்சை செய்கை

யாழ். மாவட்டத்தில் தற்போது ஆயிரத்து 128 ஹெக்ரயரில் திராட்சை பயிரிப்படுகின்றதாகவும் திராட்சை பழப்பயிர் மூலம் விவசாயிகள் அதிக இலாபத்தை பெறமுடியுமென்றும் யாழ். மாவட்ட விவசாய திணைக்கள பணிப்பாளர் கிருஸ்ணன் சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.



கடந்த 4 வருடங்களில் 300 ஹெக்ரயர் திராட்சை பயிரிப்பட்டதாக்வு யுத்தத்தின் போது 22 ஹெக்ரயராக அது வீழ்ச்சி அடைந்ததாகவும் அவர் கூறினார்.

ஆனால், கடந்த காலங்களில் திராட்சை பயிர்ச்செய்கை மேம்படுத்தப்பட்டு, 175 விவசாயிகளுக்கு திராட்சை பயிர்ச் செய்கைக்கான திராட்சைக்கொடி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 22 ஹெக்ரயர் ஆக இருந்த திராட்சை பயிர்ச்செய்கை 2012 ஆம் ஆண்டு 102 ஹெக்ரயராக உயர்வடைந்தது. இவ்வாண்டு ஜனவரி முதல் 128 ஹெக்ரயராக அதிகரிக்கப்பட்டு பயிரிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

1960 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட திராட்சைப் பயிர் உற்பத்தி இலங்கையில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்று வந்ததாகவும் யுத்தத்தின் பின்னர் பாரிய வீழ்ச்சியை அது கண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது கரவெட்டி, நெல்லியடி, உடுவில், புத்தூர், கோப்பாய், கைதடி, சண்டிலிப்பாய் போன்ற பிரதேசங்களில் திராட்சை பயிரிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

திராட்சை பயிர்செய்கை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரின் எதிர்வரும் காலங்களில் 200 ஹெக்ரயரை அடைய முடியுமென்றும் அவர் கூறினார்.

தற்போது, தீவுப் பகுதிகளில் மண்கும்பான், அனலைதீவு பிரதேசங்களில் ஆயிரம் ஹெக்ரயர் நிலப்பரப்பில் திராட்சை பயிரிப்பட்டு வருவதாகவும் உரிய முறையில் பயிரிப்பட்டு பராமரிக்கப்பட்டுவரின் ஒரு தடவையில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இலாபத்தை பெறமுடியுமென்றும் அவர் மேலும் கூறினார்.(அ-2)

# 5 முதல் 16 வயது வரை கட்டாயக்கல்வி

பாடசாலை செல்லும் பிள்ளைகளின் வயதெல்லையை 16 ஆக அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்ததன அமைச்சரவைக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி 5 வயது தொடக்கம் 16 வயது வரையிலான பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும்.

இது தொடர்பான சட்ட மூலம் ஒன்றும் விரைவில் தயாரிக்கப்படும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

நாடு முழுவதிலும் 15 வயதுக்கும் 16 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகள் 69 இலட்சத்து 75 ஆயிரத்து 557 பேர் உள்ளனர்.

இவர்களுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுத்து ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்குவதும் நாட்டுக்கு நல்லபிரஜைகளாக அவர்களை வாழவைப்பதுமே உத்தேச திட்டத்தின் நோக்கமென அமைச்சர் பந்துல குணவர்த்தன நம்பிக்கை வெளியிட்டார்.(அ-2)



வடமாகாண கல்வித்திணைக்களமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணனிச்சங்கமும் இணைந்து நடத்திய இணையத்தள வடிவமைப்புப் போட்டியில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்கள் 2 ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் விருதுகள் வழங்கப்படுவதையும் விருது பெற்றவர்கள் ஆசிரியருடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத ராசி பலன்கள்

## 15.06.2013 - 16.07.2013



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,**
**திருவாதிரை,**
**புனர்பூசம் , 1,2,3 ஆம் பாதங்கள்**

**கூட்டுக் கிரக யோகம் உருவாகும் நேரம்!**

**நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்று நினைக்கும் மிதுன இராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பாரக்கும் பொழுது இராசியிலேயே நான்கு கிரகங்கள் பலம் பெற்றுச் சஞ்சரிக்கிறார்கள். அதைக் கேது பார்க்கிறார். எனவே, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் மாதமாகவே இம்மாதத்தைக் கருதலாம். பிரச்சினைகளும் நெருக்கடிகளும் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கலாம். எனவே, பிள்ளையாரிலிருந்து தொடங்கி பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் தெய்வங்கள் வரை வழிபடச் செல்ல முன்வருவீர்கள்.

தனாதிபதி மூன்றில் இருப்பதால் பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பல காரியங்களைப் பாதியிலேயே விட்டுவிடுவீர்கள். என்ன இருந்தாலும் ஜென்ம குருவின் ஆதிக்கம் இருப்பதால் பிரச்சினைகளுக்கு மத்தியில் உங்கள் வாழ்க்கைப் பயணம் தொடரும்.

பேச்சாற்றலும் செயற்படுத்தும் ஆற்றலும் உங்களிடம் இருந்தாலும் காரிய தாமதங்கள் ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். புத்திர ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் வக்ர நிவர்த்தியாகப்போகிறார். எனவே, இம்மாதத்தில் பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். அவர்களின் எதிர்கால நலன் கருதி ஆடை, ஆபரணங்களை வாங்க முன்வருவீர்கள். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு.

மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் செவ்வாய் வீற்றிருக்கிறார். எனவே, இடம், பூமி விற்பனையும் அதனால் தன லாபமும் உண்டாகும். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதே நல்லது. அங்காரக வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் தங்கு தடை அனைத்தும் அகலும்.

### நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெற அறிகுறிகள் தோன்றும்

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

5,12 அதிபதியான சுக்ரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். அந்த நிகழ்வு ஜூன் 23 ஆம் திகதி நிகழ இருக்கிறது. எனவே, பிள்ளைகளால் உதிரிவருமானங்கள் கிடைக்கும். அந்நிய தேசம் அல்லது அந்நிய மாநிலங்களுக்குச் செல்வதற்கு எடுத்த முயற்சி கைகூடும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் திடீர் திருப்பங்கள் ஏற்படும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்போடு சேமிப்பு உயரும். ஏமாற்றம் செய்தவர்கள்எதிரில் வந்து மன்னிப்பு கேட்பர்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே செவ்வாய் வந்து சேரப்போகிறார். குரு மங்கல யோகம் செயற்படும் இந்த நேரத்தில் சூரிய செவ்வாய் சேர்க்கை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. தந்தை வழியில் விரிசல்கள ஏற்பட்டு அகலும். பம்பரமாய்ச் சுழன்று பணி புரிந்தாலும் உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. தெரியாதவர்களை நம்பி எந்தக் காரியங்களிலும் ஈடுபடவேண்டாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் பொறுப்புகள் மாற்றப்படலாம்.


**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

ஜூலை 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். 8,9 க்கு அதிபதியான சனிபகவான் வக்ர நிவர்த்தியாகி உச்சம் பெறும்பொழுது எதிர்பாராத சில இழப்புகளையும் சந்திக்க நேரிடும். தொழில்மாற்றச் சிந்தினைகள் மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் கூடும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வர சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. ஜூலை 7 ஆம் திகதி புதனும் வக்ர நிவர்த்தியாவதால் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்துடன் பணிபுரியத் தொடங்குவீர்கள். இம்மாதம் வியாழக்கிழமைகள் தோறும் குருவழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்குச் சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்தில் குடும்பச் சுமை கூடும். கொள்கைப்பிடிப்போடு செயற்பட இயலாது. அடுத்தடுத்து வரும் விரயங்களை ஒரு வழியாகச் சமாளிப்பீர்கள். மிதுன செவ்வாயின் சஞ்சார காலத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள், இடங்கள் வாங்கும் சூழ்நிலைகள் உருவாகலாம். கணவன்- மனைவிக்குள் அனுசரித்துச் செல்வது நல்லது. சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின்னால் திடீர் ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். பார்க்கும் கேதுவிற்குப் பரிகாரமாக விநாயகர் வழிபாட்டை மேற்கொள்வதோடு கேது பரிகாரம் செய்வதும் நல்லது.

## சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதங்கள்,**
**பூசம், ஆயிலியம்**
**சுப விரயங்கள் அதிகரிக்கும்!**

**சொல்லை செயலாக்கிக் காட்டுவதில் வல்லவர்களாக விளங்கும் கடக இராசிநேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்க விரயாதிபதி தனாதிபதியுடன் கூடி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் விதத்தில் மாதம் தொட்ங்குவதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும் என்றே சொல்ல வேண்டும். இருந்தாலும் வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். குடும்பத்தில் சுப விரயங்கள் அதிகரிக்கும். சனி வக்ர நிவர்த்தியான பிறகு இடமாற்றம், ஊர் மாற்றங்கள் எதிர்பார்த்த விதத்தில் வந்து சேரலாம். என்ன இருந்தாலும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் மேலோங்கப் போகிறது. எனவே, உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகலாம். வாகன மாற்றம் செய்வதற்கு உகந்த மாதமிது.

பங்காளிப்பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது புத்திசாலித்தனமாகும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் முன்பின் தெரியாதவர்களால் சில பிரச்சினைகள் உருவாகலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவச் செலவு கூடுகிறதே என்ற கவலை மேலோங்கும். எந்த நோய் வந்தாலும் வந்த மாத்திரத்தில் மருத்துவ ஆலோசனைகளைப்பெற்று அதற்குத் தீர்வு காண்பது நல்லது.

அதேபோலத்தான் எந்தப்பிரச்சினைகள் வந்தாலும் முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து அதற்கு ஒரு முடிவெடுத்து தீர்வு காண்பது நல்லது. அர்த்தாஷ்டம சனி, அர்த்தாஷ்டம இராகுவின் காலத்தில் பிரச்சினைகள் வந்தாலும் முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து அதற்கு ஒரு முடிவெடுத்து தீர்வு காண்பது நல்லது. இந்தக்காலத்தில் சில பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்கும் சூழ்நிலைகள் உருவாகும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொண்டால் சஞ்சலங்கள் தீரும்.

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. தாய்வழிப்பிரச்சினைகள் தலைதூக்கலாம். அந்நிய தேசத்திலிருந்து போதுமான ஆதாயம் கிடைக்கவில்லையே என்று தாய்நாடு திரும்பும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உண்டு. விலை உயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை.

நண்பர்களால் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பெண்வழிப்பிரச்சினைகள் தலைதூக்காமல் பார்த்துக்கொள்வது நல்லது. அழகுப் பொருட்களை வாங்கிச்சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனச்செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். 5,10 க்கு அதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சிறுசிறு விரயங்கள் ஏற்படலாம். கல்விக்காவும் கடல்தாண்டும் முயற்சிக்காகவும் செலவிட்டு மகிழ்வீர்கள். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகன்று அதை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். உடன்பிறப்புக்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வீடு கட்டும் அல்லது வாங்கும் முயற்சிகளில் அனுகூலம் தரும் இந்த நேரத்தில் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் வீடு வாங்கினால் நிலைக்கும் என்பதை ஆராய்ந்து வாங்குவது நல்லது.

**சனியின் வக்ர நிவர்த்திக்காலம்!**

இக்காலம் தான் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலம். ஜூலை 4 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, அர்த்தாஷ்டம சனி பலம் பெற்றுவிடுகிறார். சனி பலம் பெறும் இந்த நேரத்தில் துணிவும் தன்னம்பிக் கையும் [illegible]லாம். தொல்லை தரும் எதிரிகளின் [illegible] கூடலாம். மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டால் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கலாம். ஜூலை 7 இல் புதனும் வக்ர நிவர்த்தியாவதால் மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். மங்கல நிகழ்வுகள் வீட்டில் நடைபெறலாம். இம்மாதம் குல தெய்வ வழிபாட்டை மேற்கொண்டு குதூகலத்தை வரவழைத்துக்கொள்ளுங்கள்.

### கல்விக்காகவும் கடல் தாண்டிச் செல்லும் முயற்சிக்காகவும் செலவிட்டு மகிழ்வீர்கள்


**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய காலமாகும். குடும்ப ஒற்றுமை கூடும். கடுமையான முயற்சித்தும் காரியங்கள் கடைசி நேரத்திலேயே கைகூடலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வு பெறலாமா? என்று சிந்திப்பர். கணவன்- மனைவிக்குள் கனிவு கூட அனுசரிப்பும் அரவணைப்பும்தான் தேவை. குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்லாமல் இருப்பது நல்லது. அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு திடீரெனப்பொறுப்புகள் மாறும். சனீஸ்வர வழிபாடு சந்தோஷத்தை வழங்கும் இராகு வழிபாடு யோகத்தைச்சேர்க்கும். 

தொடரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்"



ஆன்மீகம் 32

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி


அடியேன்:- அவரைத்தான் ஒருவன் சுட்டுவிட்டானே?

சித்தர்:-வரப்போகும் இரண்டாயிரத்து இரண்டாம் வருடம் தமிழில் சித்ரபானு வருடம் என்பார்கள். இந்த ஆண்டுதான் அழிவுகளின் தொடக்கம் தொடங்கும்! உலகில் கடல் சூழ்ந்த வல்லரசு நாடுகள் ஐரோப்பாக் கண்டம், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, ஆசிய கண்டம் போன்ற நாடுகள் கடலுக்குள் தான் இருக்கிறது. கண்மூடி கண் திறப்பதற்குள் இந்த நாட்டில் நகரம் கடலில் மிதக்கும். இப்போது இது எல்லாம் சொல்வது தவறு. நமக்கு தேவை தென்னிந்திய மக்கள். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகாதான் தென்னிந்தியா. இதையே இரண்டு தீவாய் மாற்றுவேன். பெரும் வெள்ளத்தில் பாதிக்கப்படும் யுத்த அபாயங்கள் ஏற்படும். உலக அரசியலில் ஆங்காங்கே பலத்த மாறுதல் ஏற்படும்! உலகில் கி.பி. இரண்டாயிரத்திலிருந்தே இயற்கையின் எச்சரிக்கை துவங்கிவிட்டது! அதனால் நாட்டில் மக்களிடையே தர்ம உணர்வை உண்டாக்க நீ உன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

அடியேன்:- உலகில் நன்மைக்கு யாகங்கள் நடத்துவது தானே வழக்கம். யாகங்களை விட அன்னதானம் செய்பவர் எப்படி உயர்ந்தவர் சாமி?

சித்தர்:- உலகிலேயே கொடிய நோய் எது? தெரியுமா?

அடியேன்:- ஒன்றும் புரியாமல் விழித்தேன்!



கும்பமலை கும்பமுனி சித்தர் இடம்

சித்தர்:- உலகிலே சிறந்த தானம் எது தெரியுமா?


அடியேன்:- (மீண்டும் மௌனம்)

சித்தர்:- மனிதனுக்கு பொன், பொருளை எவ்வளவு வாரிக்கொடுத்தாலும் அவனுக்கு- மனம் நிறைவதில்லை! மேலும் வேண்டும் என்றுதான் உள்ளத்தில் ஆசை வரும்! ஆனால், அறுசுவை விருந்தினாலும் வயிறு நிறைந்துவிட்டால் எந்த மனிதனும் போதும் என்றுதான் சொல்வான்!

வாய் வாழ்த்தாவிட்டாலும் வயிறு வாழ்த்தும் என்பார்கள்! பிறவித் துன்பம் மரணத் துன்பம் ஆகியவைகளை விட பசித்துன்பம் தான் கொடியது! அத னால்தான் பசிவந்திடப் பத்தும் பறந்து விடும் என்றார் அவ்வைப் பிராட்டி! இந்தப் பசிப் பிணி பிடித்தால் ஆர்வ அறிவு மங்கும்! குணம் குலையும். சிந்தனை சிதையும் அகந்தை அழி ந்தேவிடும். உடலின் பஞ்ச பூதங்களும் வலிமை இழக்கும். கண் பஞ்சடைத் துப்போகும். காது அடைத்துக் கொள்ளும். நாக்குவரண்டு கை கால்கள் சோர்ந்துவிடும். குரல் எழும் பாது! மானம், ரோஷம், கௌரவம், குலப்பெருமை, கல்வியின் உயர்வு, யாவும் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விடும்! பசிக்கும் உணவுக்காக பிச்சைக் காரனைப் போல் கையேந்தும் நிலைக்கு மனம் தளர்ந்துவிடும். ஆனால், இவ்வளவு துன்பங்களும் உணவு உட்கொண்ட உடனே சொல்லாமல் ஓடிவிடும்!

தொடரும்

# சிங்கள பெருந்தேசியவாதத்திற்கு பலியாகுமா 13-வது திருத்தம்...?



**பேரினவாத சக்திகளின் சுயரூபம் மெல்ல மெல்ல வெளிப்படத் தொடங் - கியுள்ளது**

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தான் முன்னர் ஒன்றாக இணைந்து செயற்பட்டவை. அவற்றை இணைப்பதற்காகவே 13ஆவது திருத்தத்தில், அது பற்றிய சரத்துகள் இடம்பெற்றுள்ளன. அதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. வடக்கில் கூட்டமைப்பு ஆட்சியைப் பிடித்து, கிழக்கிலும் அதுபோன்ற நிலை உருவானால், இரண்டு மாகாணசபைகளும் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிணைந்து விடுமோ என்பதில் அரசாங்கத்துக்கும் சிங்களப்பேரினவாதிகளுக்கும் அச்சம் உள்ளது. அதனால் தான், இந்த மாகாண ஒன்றிணைப்பை தடுக்கும் வகையில், புதிய திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. இது எதிர்காலத்தில் ஒரு போதும் வடக்கு, கிழக்கு இணைவு நடக்கவே கூடாது என்பதை அடிப்டையாகக் கொண்ட முடிவு.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உயர்நீதிமன்றத்தினால் பிரிக்கப்பட்ட போது, அவை இணைக்கப்பட்ட முறை தான் தவறானது என்றும் அது நீதிமன்றத்தின் முடிவு என்றும் தனக்கு அதில் பங்கில்லை என்றும் தப்பித்துக் கொண்டவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால், இப்போது அவரே, மீண்டும் வடக்கும், கிழக்கும் இணைக்கப்படக் கூடாது என்பதற்காகவே புதிய திருத்தத்தை செய்யவுள்ளார். இது தமிழரின் பாரம்பரிய தாயகமான வடக்கும், கிழக்கும் ஒன்றிணைவதைத் தடுப்பதற்கான அரசாங்கத்தின் உச்சக்கட்ட மூலோபாயமாகக் கருதலாம்.

அடுத்து, இதுவரை மாகாண சபைகள் தொடர்பான எந்தவொரு சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதானாலும், எல்லா மாகாண சபைகளினதும் அங்கீகாரம்பெறப்பட வேண்டும் என்றுள்ள பிரிவையும் அரசாங்கம் [illegible]. இதற்குப் ப[illegible] பெரும்பான்மை மாகாணசபைகளின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தினால் அத்தகைய சட்ட மூலங்களை நிறைவேற்ற முடியும். இது சிறுபான்மையினரின் அதிகாரத்துக்குட்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உள்ள தனியுரிமை மற்றும் பாதுகாப்புத்தன்மை இல்லாது ஒழித்துவிடும். இதன்மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சிங்களப் பெரும்பான்மையினரின் விருப்பங்களை நிறைவேற்றுகின்ற ஒன்றாக மாற்றப்பட்டுவிடும்.

இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர்,காணி, பொலிஸ் அதிகாரங்களை தேவைப்படும்போது அரசாங்கம் பெரும்பான்மையான மாகாணசபைகள் மற்றும் நாடாளுமன்றத்தில் உள்ள ஆதரவைக் கொண்டு இல்லாமல் செய்துவிடமுடியும். அதுமட்டுமன்றி மாகாண சபைகளின் ஒட்டுமொத்த அதிகாரங்களுமே இதன்மூலம் சிங்களப் பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும். இது மூலம் தமிழரின், முஸ்லிம்க்ளின் அரசியல் அதிகாரத்தை சிங்களப் பெருந்தேசியத்துக்கு அடிமைப்படுத்தும் ஒரு திட்டமாகவே கருதப்படுகிறது. ஒரு பக்கத்தில் இந்தியாவுக்கு, 13 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்த முனையவில்லை என்று வாக்குறுதி அளித்துக் கொண்டே, இன்னொரு பக்கத்தில் இதைச் செய்யத்தயாராகியுள்ளது அரசாங்கம். இந்த திருத்தங்களை தெரிவுக்குழுவில் வைத்துச்செய்யவே அரசாங்கம் முனைந்தது. ஆனால், அந்த முயற்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுக்கமான போக்கினால் [illegible]துள்ள நிலையில், எந்த [illegible]ப்புத் திருத்தமும் இனி மேல் தெரிவுக்குழு மூலம்தான் என்று கூறிவந்த அரசாங்கம், இப்போது தனது சுயரூபத்தை மெல்ல மெல்ல வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னை ஒரு நியாயமான அரசியல் தலைவராக காட்டிக் கொண்டாலும், தமிழர்களுக்கு நல்லது செய்வேன் என்று அடிக்கடி கூறிக்கொண்டாலும், இனி மேல் அவர் நினைப்பது போல எதையும் செய்யமுடியாது என்ற நிலைஉருவாகி வருகிறது. போர் முடிவுக்கு வந்த கையுடன் ஒரு நிலையான அரசியல் தீர்வை அவர் உருவாக்கியிருந்தால், அதற்கு மக்களாணை கிடைத்திருக்கும். ஆனால், இப்போது சிங்களப் பெருந்தேசியவாதமும், பௌத்த பேரினவாதமும், தமிழர்களுக்கு எதிரான போக்கை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் , இனிமேல் அவர் செய்ய நினைத்தாலும் அதை செய்யமுடியாது. வெற்றிச் செருக்கும், சிங்கள, பௌத்த மேலாதிக்கச் சிந்தனையும் மட்டுமன்றி அவரைச் சுற்றியிருக்கின்ற சக்திகளும் கூட, அதைச்செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை.

இந்த நிலையில், 13ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தும் காரியங்கள் மிக விரைவாகவே நடந்தேறப்போகின்றன. இத்துடன் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதற்கான இன்னொரு வழியும் அடைபட்டுப் போகப்போகிறது.


முற்றும்

இன்போதத் தமிழ்-
தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேர்மை



சேகர் தன் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஒருநாள் மாலை தன் மோட்டார் பைக்கில் கடைக்குச் சென்றார். தேவையான பொருட்களை வாங்கியபின், வீட்டுக்கு பைக்கில் திரும்பிக்கொண்டிருந்தபோது, சாலையில் ஓரிடத்தில் பைக்கின் பின்புற டயர் திடீரென பஞ்சர் ஆகிவிட்டது. நல்லவேளை விபத்து ஏதுமின்றி அவரும், குழந்தைகளும் தப்பினர். பின்னர், அவர் பைக்கைத் தள்ளிக் கொண்டு வீட்டை நோக்கிச் செல்லும் போது வழியில் ஒரு மெக்கானிக்கின் கடை தென்பட

## அம்புலிமாமா கதைகள்


பஞ்சரை சரி செய்யச் சொன்னார்.


பைக்கின் பின்புற சக்கரத்தின் டியூப்பை கழற்றிய மெக்கானிக், அது மிக மோசமாகத் தேய்ந்திருப்பதைக் கண்டு, அதை சேகரிடம் காட்டி, "சார்! இந்த டியூப் இனி உதவாது. புதிய டியூப் பொருத்தினால் நல்லது" என்று சொல்ல, "சேகர் புதிய டியூப் என்ன விலை ஆகும்?" என்று கேட்டார். அதற்கு மெக்கானிக், "சார்! நல்ல கம்பனி டியூப் 200 ரூபாய் ஆகும். அதைப் பொருத்த என் கூலி முப்பது ரூபாய். ஆக மொத்தம் 230 ரூபாய் நீங்கள் தரவேண்டும்" என்றான்.

சேகர் சற்றே யோசித்தார். அப்போது இரவு எட்டாகியிருந்தது. மறுநாள் காலை அலுவலகம் செல்வதற்கும் பைக் தேவைப்படும். காலையில் மெக்கானிக் சீக்கிரம் கடையைத் திறக்க மாட்டான். எனவே, இப்போதே டியூப்பை மாற்றிவிடலாம் என்று தோன்றியது. உடனே அவர் மெக்கானிக்கிடம் "சரி! நீ சொல்கிறபடியே டியூப்பை மாற்றிவிடு! ஆனால், உன்னிடம் புதிய டியூப் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஓ! இருக்கிறதே!" என்றான் அவன். உடனே, அவர் தன் கைப்பையைத் திறந்து பார்த்தார். அதில் போதிய பணமில்லை. அதனால் அவர் மெக்கானிக்கிடம் "பக்கத்தில் ஏடி.எம் ஏதாவது இருக்கிறதா?" என்று விசாரிக்க, அவன் "சார்! நீங்கள் இப்படியே நேராக நடந்து சென்றால், ஸ்வப்னா தியேட்டர் வரும். அதன் பக்கத்தில் ஒரு ஏடி.எம் இருக்கிறது. நீங்கள் அங்கு சென்று பணம் எடுத்து வாருங்கள். அதற்குள் நான் உங்கள் பைக் டயரிலிருந்து பழைய டியூப்பை எடுத்துவிட்டு, புதிய டியூப் பொருத்தி, காற்றடித்து வைக்கிறேன்" என்றான்.

"சரி! அப்படியே செய்! நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, சேகர் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஸ்வப்னா தியேட்டரை நோக்கிச் சென்றார். பிறகு, அதன் பக்கத்திலிருந்த ஏடி.எம்மிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பினார். அதற்குள் மெக்கானிக் டியூப்பை மாற்றி ரெடியாக வைத்து இருந்தான். சேகர் அவனுக்கு ஒரு ஐநூறு ரூபாய் நோட்டைத் தர, அவன் அதை தன் கைப்பையிலிருந்து சில நோட்டுக்களை வெளியே எடுத்து அவரிடம் மீதித் தந்தான்.





அதை எண்ணிப் பார்த்த சேகர், "என்னப்பா! நீ எவ்வளவு எடுத்துக் கொண்டாய்?" என்று கேட்க, மெக்கானிக், "ஏன் சார்! நான் உங்களிடம் ஏற்கனவே கூறிய 230 ரூபாய் தான் எடுத்துக் கொண்டேன்!" என்ன பிரச்சினை? என்றான்.

"நான் உனக்கு கொடுத்தது 500 ரூபாய் நோட்! நீ கொடுக்க வேண்டிய மிகுதி 270 ரூபாய். ஆனால், நீ கொடுத்து இருப்பதோ 370 ரூபாய்." என்றவர், ஒரு 100 ரூபாய் நோட்டை அவனிடம் திருப்பிக் கொடுத்தார்.

அப்படியே அதிர்ந்து போனான் மெக்கானிக். அவருக்கு நன்றிகூட சொல்ல முடியாமல் நாதழுதழுத்துவிட்டது. கண்களில் நீர் மல்க, "மிக்க நன்றி சார்" என்றான்.

அவன் தோளைத் தட்டிக் கொடுத்த சேகர், "அப்பா! நீங்கள் எல்லாம் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிப்பவர்கள்! அதனால் உனக்கு நியாயமாக சேரவேண்டிய பணத்தை நான் தராமல் வைத்துக் கொண்டால் கடவுள் என்னை மன்னிக்க மாட்டார். நேர்மையாயிருப்பவர்களைத்தான் கடவுள் விரும்புகிறார்" என்றார்.

அவர் சொன்ன வார்த்தைகள் மெக்கானிக்கின் ஓராயிரம் ஊசிகள் போல் தைத்தன. உடனே அவன் "சார்! தயவுசெய்து பத்து நிமிடம் உட்காருங்கள்" என்றவன், விறுவிறுவென பைக்கின் பின்புற சக்கரத்தைக் கழற்றினான். அவன் எதற்காக அப்படிச் செய்கிறான் என்று சேகருக்குப் புரியவில்லை. சக்கரத்தைக் கழற்றிய மெக்கானிக் அதனுள்ளே இருந்த டியூப்பை எடுத்து அகற்றி விட்டு கடைக்குள் சென்று வேறு ஒரு புதிய டியூப்பை கொண்டு வந்து அதைப் பொருத்தினான். சேகருக்கு ஒரே குழப்பம் உண்டாகியது. டயரைப் பொருத்திய பின் மீண்டும் காற்று அடித்து, பைக்கை ரெடி செய்தான்.

பிறகு, சேகரைப் பார்த்து அவன் "சார்! என்னை மன்னித்து விடுங்கள். உங்களை நான் ஏமாற்றி விட்டேன். நல்ல கம்பனி டியூப் என்று சொல்லி 200 ரூபாய் வாங்கிக் கொண்டு, நான் தரமற்ற மலிவான டியூப் ஒன்றைத்தான் பொருத்தினேன். ஆனால், நான் தவறுதலாக அதிகம் கொடுத்த நூறுரூபாயை நீங்கள் எப்போது திருப்பிக் கொடுத்தீர்களோ, அந்தக் கணமே என் மனச்சாட்சி என்னை சுட்டெரித்தது.

உங்களைப் போன்ற நேர்மையானவரை ஏமாற்ற நினைத்தது மகாபாவம் என்று நினைத்தேன். அதனால் நான் பொருத்திய மலிவான டியூப்பை எடுத்துவிட்டு நல்ல கம்பனி டியூப்பை பொருத்தியுள்ளேன். இனிமேல் நான் யாரையுமே ஏமாற்ற மாட்டேன்" என்றதும், சேகர் புன்னகைத்துக் கொண்டே மறுபடியும் அவனுடைய தோளில் தட்டிவிட்டு தன்னுடைய பைக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமலும் சம்பிக்கவும் சிங்கள மக்களை முட்டாள்களாக்க முயற்சி-ஐ.தே.கட்சி

(கொழும்பு)

13 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பில் விமல் வீசவன்சவும் சம்பிக்க ரணவக்கவும் இணைந்து பெரும்பான்மை சிங்கள மக்களை முட்டாள்களாக்க பார்க்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு பல காரணங்களைப் பலர் தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில் அரசாங் கத்தில் அமைச்சர்களாக இருக்கும் விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ஆகியோர் சிங்கள மக்கள் மத்தியில் 13 ஆவது திருத்தத்திற்கு எதிரான கருத்துக்களை திணிக்கின்றனர்.

மக்கள் மத்தியில் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. அவை பற்றி அவர்கள் வாய் திறப்பதேயில்லை. கசினோ நிலையத்தை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோ, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் மின் கட்டண உயர்வு போன்றவற்றிற்கு எதிராகவோ குரல் கொடுப்பதுமில்லை.

இந்நிலையில் அவர்களின் செயற்பாட்டிற்கு அரசாங்கம் தலைசாய்த்து 13 ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு யோசனையை முன்வைத்துள்ளது.

இதேவேளை, 13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவிக்குமானால் ஐக்கிய தேசியக் கட்சி அது குறித்து தனது அபிப்பிராயத்தை வெளியிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மிளகாய் பதப்படுத்தும் நிறுவனத்தினுள் ஆயுத முனையில் கொள்ளை

## *1000 கிலோ மிளகாய், பணம் அபகரிப்பு*

(கொழும்பு)

மிளகாய் பதப்படுத்தும் நிறுவனம் ஒன்றிற்குள் புகுந்து ஆயுத முனையில் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஆயிரம் கிலோ செத்தல் மிளகாய் மற்றும் பணத்தை கொள்ளையிட்ட இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தள பிரதேசத்திலுள்ள மிளகாய் பதப்படுத்தம் நிறுவனம் ஒன்றில் இரவு நேரம் இந்தக் கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனத்திற்குள் பலாத்காரமாக புகுந்த இருவர் அங்கிருந்த ஊழியர்களுக்கு ஆயுதங்களைக் காண்பித்து பயமுறுத்தியுள்ளதுடன் 40 இலச்சத்து 81 ஆயிரம் ரூபா பெறுமதியான மிளகாய் மற்றும் 5 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தள பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து மேற்கொண்ட விசாரணையின் மூலம் ஊவகுடா ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட ஆயிரம் கிலோ மிளகாய், 5 இலட்சம் ரூபா பணம், இரண்டு துப்பாக்கிகள் மற்றும் நகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வெல்லவாய மஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# முதலீட்டுக்கு சிறந்த நாடாக இலங்கை

## *அமைச்சர் பசில் பெருமிதம்*

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் தற்சமயம் இலங்கை அமைதியான நாடாகவும் துரிதமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவும் திகழ்கின்றது. அது மட்டுமன்றி முதலீட்டுக்கான சிறந்த நாடாகவும் இலங்கை திகழ்கின்றதென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக தென்கொரிய வாத்தக பிரதிநிதிகள் குழுவொன்று தற்சமயம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

தெற்காசியாவிலே வருடத்தில் 365 நாட்களிலும் துண்டிக்காது மின்சாரத்தை வழங்கும் நாடாக இலங்கை திகழ்வதாகவும் இங்குள்ள தொழிற்சாலைகள் தினசரி 24 மணி நேரமும் ஓயாது இயங்குவதாகவும் குறிப்பிட்டார்.

தென்கொரிய அரசின் நிதி உதவியுடன் கேகாலை மாவட்டத்தில் கஹம்பில்யாகம மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் எப்பிட்டவத்தை ஆகிய இரு கிராமங்களும் தென்கொரிய முறைப்படி அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாகவும் இலங்கையில் ஏனைய பகுதிகளுக்கும் உத்தேச திட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் தென்கொரிய வர்த்தக பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ஜூன் டெக் ஷீக் தெரிவித்தார்.

இலங்கையில் மேலும் முதலீட்டு திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தென்கொரிய முதலீட்டாளரை தாம் விழிப்பூட்டுவதாகவும் அக்குழுவினர் அமைச்சரிடம் உறுதியளித்தனர். (அ-2)




- 1789- பவுண்டி என்ற பிரித்தானியக் கப்பலின் மாலுமிகளின் கிளர்ச்சியை அடுத்து கப்பலின் தலைவனுடன் சேர்ந்து சிறிய படகொன்றில் தப்பிய 19 பேர் 7,400 கி.மீ தூரம் பயணித்து தீமோரை அடைந்தனர்.
- 1800-நெப்போலியனின் பிரெஞ்சு இராணுவத்தினர் வடக்கு இத்தாலியில் ஆஸ்திரியர்களுடன் போரிட்டு வெற்றி பெற்று இத்தாலியை மீளவும் கைப்பற்றினர்.
- 1807-நெப்போலியனின் பிரெஞ்சு இராணுவத்தினர் போலந்தின் பிரீட்லாந்து என்ற இடத்தில் ரஷ்யப் படைகளுடன் மோதி வெற்றி பெற்றனர்.
- 1821 - வடக்கு சூடானின் சென்னார் பேரரசன் மன்னன் ஏழாம் பாடி என்பவன் ஒட்டோமான் பேரரசின் தளபதி இஸ்மயில் பாஷாவிடம் சரணடைந்ததன் மூலம் சென்னார் பேரரசு முடிவுக்கு வந்தது.
- 1846-கலிபோர்னியாவின் சொனோமா என்ற இடத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் மெக்சிக்கோ மீது போரை ஆரம்பித்து கலிபோர்னியாவைக் குடியரசாக அறிவித்தனர்.
- 1872-கனடாவில் தொழிற் சங்கங்கள் அதிகாரபூர்வமாக்கப்பட்டன.
- 1900-ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1931 - பிரான்சில் சென் ஃபிலிபேர்ட் என்ற படகு மூழ்கியதில் 500 பேர் உயிரிழுந்தனர்.
- 1940-இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜேர்மனி கைப்பற்றியது.
- 1940-போலந்தின் 728 போர்க் கைதிகள் நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதைமுகாமின் முதலாவது சிறைக்கைதிகளாக சேர்க்கப்பட்டனர்.
- 1941-அனைத்து ஜேர்மனிய மற்றும் இத்தாலிய சொத்துக்களையும் ஐக்கிய அமெரிக்கா முடக்கியது.
- 1941 -எஸ்தோனியர்கள், லாத்வியர்கள் மற்றும் லித்துவேனிய மக்கள் பலரை சோவியத் ஒன்றியம் நாட்டை விட்டு வெளியேற்றி வதை முகாம்களுக்கு அனுப்பியது.
- 1962-ஐரோப்பிய வான் ஆராய்ச்சி மையம் பாரிசில் அமைக்கப்பட்டது.
- 1967-சீனா தனது முதலாவது ஐதரசன் குண்டைச் சோதித்தது.
- 1967-மரைனர் 5 விண்கலம் வீனஸ் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 1982-போக்லாந்து தீவுகளின் தலைநகர் ஸ்டான்லியில் நிலைகொண்டிருந்த ஆர்ஜெண்டீனப் படைகள் பிரித்தானியப் படைகளிடம் சரணடைந்ததை அடுத்து போக்லாந்து போர் முடிவுக்கு வந்தது.
- 1985 - TWA 847 விமானம் கிறீசில் இருந்து ரோம் செல்லுகையில் ஹெஸ்புல்லா இயக்கத்தினரால் கடத்தப்பட்டது.
- 1999-தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக தாபோ உம்பெக்கி பதவியேற்றார்.
- 2002-கராச்சியில் அமெரிக்க துதராலயத்துக்கு முன்னர் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 12 பேர் உயிரிழந்து 50 பேர் காயமடைந்தனர்.
- 2007-காசாப் பகுதி தமது முழுக்கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்தது.

*பிறப்புகள்*

- 1899-யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர் (இ. 1972)
- 1929 - சே குவேரா, சோஷலிசப் புரட்சியாளர் (இ. 1967)
- 1969-ஸ்ரெஃபி கிராஃப், ஜேர்மனிய டென்னிஸ் வீராங்கனை


*இறப்புகள்*

- 1965 -கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (பி. 1902)
- 1968- சல்வடோரே குவாசிமோடோ, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய எழுத்தாளர் (பி. 1901)
- 2012-காகா ராதாகிருஷ்ணன் , பழம்பெரும் தமிழ் சினிமா நடிகர்

*சிறப்பு நாள்*

- உலக இரத்தம் வழங்கல் தினம்
- உலக வலைப்பதிவர் தினம்

### கந்த முருகேசனார்



கந்த முருகேசனார் வட மாகாணத்தில் தென்புலோலியில் 1902 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார். இவர் ஈழத்துத் தமிழறிஞர். *உபாத்தியாயர்* என்றும் *தமிழ்த் தாத்தா* என்றும் அழைக்கப்பட்டவர். இவர் தமிழ் அறிஞராக, சமூக சீர்திருத்தவாதியாக, தர்க்கவாதியாக, பல்துறை விற்பனராக வாழ்ந்தவர்.

இவர் ஒரு வறிய விவசாய குடும்பத்தில் பிறந்து தமது ஆரம்பக் கல்வியை தரம் 1 முதல் 4 வரை தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் அதன் பின்னர் புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையென அழைக்கப்பட்ட வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கற்றதுடன் கல்வியை வறுமையின் காரணமாக இடையில் நிறுத்தினார். பின்பு நன்நூல் யாப்பிலக்கண காரிகை போன்ற சிற்றிலக்கணங்களையும், தொல்காப்பியம் போன்ற பேரிலக்கண நூல்களையும் தானாகவே எவரினதும் உதவியுமின்றி படித்து ஒரு தலைசிறந்த அறிஞரானார்.

இவருக்கு ஏறத்தாழ 25 ஆவது வயதில் கால்கள் வலுவிழந்தன. இவர் ஆரம்பத்தில் புற்றளை சாரதா வித்தியாசாலையில் (தற்போதைய புற்றளை மகா வித்தியாலயம்) ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் இவரது உறைவிடமான "தமிழகம்" ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது. இயற்கைச் சூழலில், வெண் மணற்பரப்பில், இப்பள்ளிக்கூடம் பாலர் வகுப்பு முதல் பண்டிதர், வித்துவான் வகுப்பு வரை எப்போதும் மாணாக்கர்களால் நிறைந்திருக்கும். இங்கு தமிழ் மட்டுமன்றி சமயம், தர்க்கம், புவியியல், கணிதம் யாவும் இவரால் இத்திண்ணைப் பள்ளியில் கற்பிக்கப்பட்டன.

இவர் 1965 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி காலமானார்.

கந்த முருகேசனாரின் நினைவாக புற்றளை மகா வித்தியாலயம், புற்றளை சனசமூக நிலையம், மந்திகை சந்தி ஆகியவற்றில் முருகேசனாரின் உருவச்சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13-வது திருத்தத்தின் பல்லைப் பிடுங்கும், அரசின் முயற்சிக்கு இந்தியாவின் பதில் ?

அரசிலமைப்பின் 13-வது திருத்தத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம், தீவிரமாக இறங்கியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், பதவிக்கு வந்த காலத்தில் இருந்து அதன் .செற்பாடுகளைக் கூர்ந்து அவதானித்து வருகின்ற எவருக்கும் இது ஒன்றும் எதிர்பார்க்கப்படாத செய்தியாக இருக்க முடியாது.

ஏனென்றால்,. 13வது திருத்தச் சட்டமும் மாகாணசபைகளும் அவசிய மற்றவை என்ற கருத்தை இந்த அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளது. அதைவிட மாகாணசபைக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது, வழங்கப்படமாட்டாது என்ற உறுதியான நிலைப்பாட்டையும் இந்த அரசாங்கம் கொண்டுள்ளது.

வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்குத் தயாராக வேண்டிய கட்டம் நெருங்குகின்ற நிலையில், 13-வது திருத்தச் சட்டத்தை இப்படியே விட்டுவைக்க அரசாங்கம் விரும்பவில்லை. அதேவேளை, அரசாங்கத்தினால், வெளிப்படையாக, 13வது திருத்தத்ச் சட்டத்தை முற்றாக ஒழிப்பதிலும் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அதில் முக்கியமானது இந்தியா தான்.

1987 இல் இந்தியா- இலங்கை உடன்பாட்டுக்கு அமைய இந்த 13வது திருத்தச் சட்த்தை ஜே.ஆர் ஜெயவர்த்தன கொண்டு வந்திருந்தார். அதற்கு முற்றிலும் அடிப்படைக் காரணியாக இருந்தது இந்தியா தான்.

இப்போது இந்தியா, தமிழர் பிரச்சினைக்கு 13-வது திருத்தச் சட்டத்தின் மூலம் நிலையான தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்றே வலியுறுத்தி வருகிறது.

அதாவது, வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையாக 13-வது திருத்தமே அமைய வேண்டும் என்பதே இந்தியாவின் உறுதியானதும் இறுதியானதுமான நிலைப்பாடாக உள்ளது. எனவே, இந்தியாவைப் பகைத்துக்கொண்டு 13-வது திருத்தச் சட்ட்த்தை இல்லாமல் செய்வது முடியாத காரியாமாக அரசாங்கத்திற்கு இருந்தது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் மிகத் தந்திரமாக, 13-வது திருத்தச் சட்டத்தை நீக்க அல்லது மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பறிக்க அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. அதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதற்குள் இழுப்பதற்கு எல்லாவிதமான முற்சிகளையும் செய்து பார்த்தது.

தெரிவுக்குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துக்கே முன்னுரிமை கொடுக்கப்படும் என்ற நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட, எதிர்க்குரலை எழுப்பும் கட்சிகளின் கருத்துக்களை அரசாங்கத்தினால், சுலபமாக முறியடித்திருக்க முடியும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்க மறுத்துவிட, அதன்வழியே ஐ.தே.க, வும் செயற்பட, அரசாங்கத்தின் திட்டம் பிசுபிசுத்துப்போனது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் வந்துவிட்டால், சிக்கலாகிவிடும் என்றுணர்ந்த அரசாங்கம், 13-வது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்க நடவடிக்கை எடுத்தது. ஆனால், இந்தியத் தரப்பில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியதால், அந்த முயற்சி ஆரம்பத்திலேயே முடங்கியது.

இதையடுத்து, அரசாங்கத்தில் உள்ள ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி என்பன 13-வது திருத்தத்தை ஒழிக்க வலியுறுத்தி தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தயாராகின.

இத்தகைய சூழலில், அரசாங்கம் தானாகவே முன்வந்து, 13-வது திருத்தத்தை நீர்துப்போகச் செய்யும் வகையில் இரண்டு திருத்தங்களைச் செய்வதற்கு தயாராகியுள்ளது. இது தொடர்பான யோசனை அரசாங்கத்தினால், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் யோசனைப்படி, மாகாணங்களை இணைப்பதற்கான சட்டப்பிரிவை நீக்கவும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில், பெரும்பான்மை மாகாணசபைகளின் அங்கீகாரமே போதும் என்று திருத்தம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு திருத்தங்களின் மூலம் அரசாங்கம் எந்த நேரத்திலும், காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிப்பது உள்ளிட்ட எல்லாவற்றையுமே செய்ய முடியும். அரசாங்கம் மிகத் தந்திரமான முறையில் இந்தத் திருத்தங்களை மேற்கொள்ள முனைவதை அவதானிக்கலாம்.

நேரடியாக இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாமல், சிங்களத் தேசியவாதச் சிந்தனை கொண்ட கட்சிகளைத் திருப்திப்படுத்தும் வகையில், அதேவேளை, 13 -வது திருத்தத்தை பலவீனப்படுத்துவதே அரசின் திட்டம். அதாவது ஒரே கல்லில் மூன்று காய்களை வீழ்த்த முனைகிறது அரசாங்கம்.

ஆனால், 13-வது திருத்தத்தில் அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள திருத்தங்கள், அதனைப் பலவீனப்படுத்தும் என்பதை இந்தியா அறியாமல் போகாது. எனினும், இந்தியத் தரப்பில் இருந்து அது பற்றிய எந்தக் கருத்தும் வெளியாகவில்லை. இருந்தாலும், தமிழ்நாட்டில் இருந்து, 13-வது திருத்தத்தைக் காக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும், என்ற குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டுமன்றி, தமிழ் நாட்டில் உள்ள காங்கிரஸ் தலைவர்களும் 13-வது திருத்தத்தைக் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் 13-வது திருத்தத்தை பலவீனப்படுத்தும் கொழும்பின் முயற்சிகள் விடயத்தில் இந்தியா என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி வலுவாக எழுந்துள்ளது.

அதேவேளை, 13-வது திருத்தம், முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அடுத்து என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி எழுகிறது.

மாகாணசபைகளோ, 13-வது திருத்தமோ தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படையாக



இருக்க முடியாது என்று கூறினாலும், இருக்கின்ற ஆகக் குறைந்த ஓர் அதிகாரப் பகிர்வுப் பொறிமுறையும் பறிபோய் விடக்கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக இருக்கிறது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா அவசர அழைப்பு விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த அழைப்பையோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் புதுடெல்லிப் பயணத்தையோ இலங்கை அரசாங்கம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளாது. ஏனென்றால், இந்தியாவின் அதிகார்பூர்வ கருத்து எதுவும் வெளியாகாத நிலையில் சத்தமின்றி கூட்டமைப்பை புதுடெல்லிக்கு அழைத்தது, அரசாங்கத்துக்கு சங்கடத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தவே செய்யும்.

13-வது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்தவோ, ஒழிக்கவோ போவதில்லை என்று ஒருபுறத்தில் வாக்குறுதி கொடுத்த அரசாங்கமே, இன்னொரு புறத்தில் அதன் பற்களைப் பிடுங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது இந்தியாவை சினங்கொள்ள வைக்கும் செயலாகவே இருக்கும்.

இந்தநிலையில் இந்தியாவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்திக்கவுள்ளதை அரசாங்கம் சந்தேகக் கண்கொண்டே பார்க்கும்.

13-வது திருத்தம் உள்ளிட்ட அரசியலமைப்பில் எந்தத் திருத்தத்தை மேற்கொள்வதாயினும், இனிமேல் தெரிவுக்குழு மூலமே மேற்கொள்ளப்படும் என்று அண்மையில் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். அதற்கு முரணாகவே அரசாங்கம் இப்போது மீண்டும் தனக்கு வசதியான முறையில் அரசியலமைப்பில் திருத்தம் செய்ய முனைகிறது.

இந்த அரசியலமைப்புத் திருத்தம், வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் நிறைவேறும் என்று அடித்துச் சொல்கிறது அரசாங்கம். 13-வது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்துவதன் மூலம் சிங்களத் தேசியவாதிகளைத் திருப்திப்படுத்துவதில் அரசாங்கம் வெற்றி கண்டாலும், தமிழர் தரப்பின் அவநம்பிக்கைகளைச் சம்பாதிக்கவே நேரிடும். அது வடமாகாணசபைத் தேர்தலில் நிச்சயம் எதிரொலிக்கும் என்பதுடன், நல்லிணக்கத்துக்கு சவாலாகவும் அமையலாம்.

ஒருவேளை, அதிகாரங்கள் பிடுங்கப்பட்ட மாகாணசபைக்கு போட்டியிடப்போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் முடிவு செய்தால், அரசாங்கம் சிக்கலில் மாட்டிக்கொள்ளும்.

ஏனென்றால், அத்தகைய முடிவு, இலங்கையில் நிலையான அமைதியை உருவாக்க எண்ணும் நாடுகளின் கனவில் மண்ணை அள்ளிப்போடுவதாக அமையும். அத்தகையதொரு நிலை உருவாவதற்கு இந்தியாவோ அல்லது மேற்கு நடுகளோ விரும்பமாட்டாது.

எனவே தான், அரசாங்கம் இப்போது 13-வது திருத்தச் சட்டத்தை பலவீனமாக்கும் நகர்வுளில் இறங்கினாலும், அது எந்தளவுக்குச் சாத்தியமாகப்போகிறது என்பதும், அதை இந்தியா எவ்வாறு எடுத்துக்கொள்ளப்போகிறது என்பதும் முக்கியமான கேள்விகளாக உள்ளன.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தம் தமிழருக்கு தீர்வல்ல

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**13 ஆவது திருத்தம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு முழுமையான தீர்வல்ல. ஆரம்பத்தில் இருந்து இந்தியா,ஜப்பான் போன்ற நாடு களிடம் 13 ஐ விட மேலும் கொடுப்போம் என உறுதியளித்த அரசு, தற்போது அதனை மீறி செயற்பட்டுவருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

அத்துடன், அரசாங்கம் தற்போது வடக்கு மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்கு நீதிமன்றத்தின் உதவியை நாடும் சூழ்ச்சியில் இறங்கியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் கைகூடாத நிலையில், கடந்த வியாழக்கிழமை காலை அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் அவசரமாக சமர்ப்பிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களை தேர்தல் நடைபெற முன்னர் பதிவு செய்யும் சட்டமூலமானது, இறுதி நேரத்தில் அவசரமில்லை எனக் கூறி வேறு திகதிக்கு ஒத்திவைக்காது கைவிடப்பட்டது.

இதில் இருந்து, தனக்குத் தெரிந்த ஒருவரை நீதிமன்றுக்கு அனுப்பி,''நானும் இடம்பெயர்ந்தவன் இந்த நாட்டின் பிரஜை, எனது பெயர் வாக்காளர் பதிவில் இடம் பெறவில்லை'' என்று கூறி வடக்குத் தேர்தலை பிற்போட வைக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சி அம்பலமாகியுள்ளது.

இவ்வாறு பல மோசமான சூழ்ச்சிகள் ,13ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் இந்த 13ஆவது திருத்தம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு முழுமையான தீர்வும் அல்ல.

ஆரம்பத்தில் இருந்து ஜப்பான், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை மற்றும் இந்தியா போன்றவற்றுக்கு 13ஐ விட மேலும் கொடுப்போம் என உறுதியளித்த அரசு தற்போது அதனை மீறி செயற்பட்டு வருகின்றது.

ஏனைய மாகாணசபைகளில் உள்ள ஜனநாயகம் மற்றும் அதிகாரங்களை வடக்கு மக்களுக்கு கொடுக்க அரசுக்கு விருப்பம் இல்லை என்பதை ஏனைய மக்களும் சர்வதேசமும் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)



யாழ்.எய்ட் நிறுவனத்தால் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியால மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில், மாணவனுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# கனேடிய மனிதவுரிமை மையத்திற்கு கனேடிய பிரதமர் பாராட்டு

(கொழும்பு)

கனேடிய அரசு, மனிதவுரிமை மீறல்களுக்கெதிராக பொதுநலவாய நாடுகள் மற்றும் ஜீ-8 நாடுகளிடையே பகிரங்கமாக குரல் கொடுத்து வருகின்றதென்றும், கனேடிய அரசின் மனிதவுரிமை பேணும் கட்டமைப்புக்களுடன் இது இணைந்து முக்கிய பங்காளியாக செயலாற்றும் என்றும் தான் நம்புவதாகவும் கனேடியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்ட கனேடிய மனிதவுரிமை மையம், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான புரிதலை கனேடிய அரசியல் மட்டத்தில் ஏற்படுத்திய அமைப்பு என்பதுடன், கனேடிய தேசிய நீரோட்டத்தை சேர்ந்தவர்களையும் இயக்குநர்களாகவும், தொண்டர்களாகவும் இணைத்து செயற்படுகின்றது என்ற கனேடிய பிரதமரின் இந்தக் கருத்து அரச மட்டத்தில் கிடைத்த ஆணித்தரமான அங்கீகாரமாகவும் கருதப்படுகிறது.

கனேடிய மனிதவுரிமை மையம் கடந்த சனிக்கிழமை நடத்திய அதன் நான்காவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மற்றும் மாகாண மற்றும் மாநகர அரசியல் பிரமுகர்களும், பல்லின மக்களும் என பலரும் கலந்து கொண்டு மண்டபம் நிறைந்த நிகழ்வாக இடம்பெற்ற இவ்விழாவில், கனேடிய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மத்திய அரசின் பிரதான அமைச்சர்களில் ஒருவரான மக்சிம் பேணியர் கலந்து கொண்டார்.

சகல கட்சிகளையும் சார்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், பல்லின மக்களும் கலந்து கொண்டதுடன் மனிதவுரிமைகளை மதித்தல் தொடர்பான கனேடிய மனிதவுரிமை மையத்தின் செயற்பாடுகளை உலகின் வேறு பாகங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வெளிப்படையாக விடுத்ததுடன்,

கனடாவில் மனிதவுரிமைகள் தொடர்பான விடயங்களைக் கையாளும் பிரதான அமைப்பாக கனேடிய மனிதவுரிமை மையம் (CHRV) தன்னை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்ததாக தெரியவருகின்றது. (அ)

# ஆட்கடத்தல்களை தடுக்க புதிய சட்டங்கள் அமுலுக்கு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் புதிய சட்டங்களை அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

மேலும் குடிவரவு சட்டங்களில் திருத்தம் ஏற்படுத்துவதன் மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் அவுஸ்திரேலியாவுடன் இலங்கை அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்டக்குழுவினர் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

சட்டங்களைக் கடுமையாக்குவதன் மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை வரையறுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இது தொடர்பில் அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. (அ-2)

# மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த ஆணையம் நடவடிக்கை

வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கு இடையில் சமத்துவ மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணையகம் மேற்கொண்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி சிங்கள மக்களிடையே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள் குறித்த குரோத போக்கினை நீக்குதல், அவர்களையும் இலங்கை பிரஜைகள் என்ற ரீதியில் பார்க்கச் செய்தல் போன்ற பல்வேறு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்கள் அடுத்த வாரம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளன. (அ-2)

# மாகாண சபைகளை அகற்றினால் மலையகத்திலும் மோதல் வெடிக்கும்

## இ.தொ.காங்கிரஸ்

மாகாண சபைகளை இல்லாமல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், வடக்கில் மாத்திரமல்ல, மலையகத்திலும் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

பதுளை ஹாலி-எல க் வின்ஸ்டவுன் தோட்டத்தில், தோட்டத் தலைவர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டின் வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து, இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஏற்படுத்த அன்றிருந்த இலங்கை ஆட்சித்தலைவர்களை இணங்க வைத்தார்.

எனினும், அன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் ராஜீவ்காந்தி உயிரை இழக்க நேரிட்டது. அது மாத்திரமல்ல இலங்கையின் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் உயிரும் இழக்கப்பட்டது.

இப்படி கொலைகள் நடந்த போதிலும் வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைகளின் மூலம் தென் பகுதியும், மலையகமும் மாத்திரமே பயன்களை பெற்றுக் கொண்டன.

மலையக தமிழ் மக்கள் அன்று தமது பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் ஏனைய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்னால் செல்லவேண்டியிருந்தது.

குறைந்தளவான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே இருந்தனர். அவர்களைச் சந்திக்க தமிழ் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.

எனினும் மாகாண சபை ஏற்படுத்தப்பட்ட பின்னர், மலையகம் சார்ந்த அனைத்து மாகாண சபைகளின் ஆளும் கட்சிகளில், எதிர்க்கட்சிகளில் தோட்ட மக்களின் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் பெற்றமையால் மலையக மக்களின் சிரமம் பெருமளவில் குறைந்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# சட்டவிரோத பயணம்; 10 இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தில் சட்ட விரோதமாக வெளிநாடு செல்லவிருந்த 10 இளைஞர்களை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காத்தான்குடி கடற்கரை வீதியில் உள்ள மெத்தைப் பள்ளிவாசலுக்கு அருகில் இருந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, முருங்கன், கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருந்தார் என சந்தேகிக்கப்படும் காத்தான்குடியை சேர்ந்த ஒருவரும் கைதாகியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியிருந்தால் சாமியார் ஆவேன்

சிம்பு பரபரப்புப் பேட்டி



நான் சாமியாராக வேண டும் என்று விதி இருந்தால் நடந்து விட்டுப் போகட்டுமே என்று பரபரப்பாக பேசியுள் ளார் நடிகர் சிம்பு. நடிகர் சிம்புவின் சமீபகால போக்கு அனை வரையும் ஆச்சரியத் தில் ஆழ்த்தி வருகிறது. சாமி யார் கோலத்தில் ஊர் சுற்று கிறார். இமயமலைக்குப் போகி றார். அதேசமயம் தற்போது புதிதாக நடிகை ஹன்சிகாவை யும் காதலிக்கிறார் என்று பேச்சுக்கள் அடிபடுகின்றன. இதுகுறித்து தினத்தந்திக்கு சிம்பு அளித்துள்ள பரபரப்புப் பேட்டியில்,

ஹன்சிகாவை விமான நிலையம்வரை சென்று நான் வழியனுப்புவதாக சொல் வது, கேட்பதற்கு, நகைச் சுவையாக இருக்கிறது.

ஹன்சிகா மட்டுமல்ல, எந்த பெண்ணாக இருந்தா லும் சரி, என்னுள் இருக்கும் ஆத்மா 'சரி' என்று சொன் னால், அவரது காதலை ஏற் றுக்கொள்வேன்.

சமீபகாலமாக மனதள வில் நான் பக்குவப்பட்டு விட் டேன். மண்டையும், மூளை யும் சொல்வதை கேட்ப தில்லை. உள்ளுக்குள் இருக் கும் ஆத்மா சொல்கிறபடி நடக்கிறேன்.


எனது திருமணம் எப் போது நடக்கும் என்று சொல்ல முடியாது. நான் சமீபகால மாக எதையும் திட்டமிடுவ தில்லை.

ஆன்மகத்துக்கு போனால், சாமியார் ஆகிவிட வேண் டுமா என்ன? நான் ஆன்மகத் தில் ஈடுபாடு கொண்டிருப்பது உண்மை. ஆனால், சாமி யார் ஆகவில்லை. ஒருவேளை நான் சாமியார் ஆக வேண் டும் என்று விதியிருந்தால், அப்படி நடந்துவிட்டுப் போகட் டும்.

வாலு படத்தின் பெரும் பகுதி படப்பிடிப்பு முடிந்து விட்டது. இன்னும் கொஞ்சம தான் பாக்கி. அதை சீக்கி ரமே முடித்து விடுவோம். அடுத்து அந்த படம்தான். திரைக்கு வரும் என்று கூறியுள்ளார் சிம்பு.

## மதுரை மீனாட்சிக்கு தங்கக் கொடி மரம்

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ரூ.4 கோடி மதிப்பில் தங்க தகடுகள் பதிக்கப்பட்ட 62 அடி உயரம் உள்ள கொடிமரம் தயார் செய்யப்பட்டு நேற்று முன்தினம் ஆகம விதிப் படி நிறுவப்பட்டது.





## இஸ்ரேல் இராணுவ வீராங்கனைகளின் அரைநிர்வாண புகைப்படங்கள் இணையத்தில்

இஸ்ரேலில், 18 வயது பூர்த்தியடைந்த இருபாலாருமே கட்டாயமாக இராணுவத்தில் அடிப்படை பயிற்சி பெற வேண்டும் என்னும் சட்டம் அமுலில் உள்ளது. அதன்படி பயிற்சி யில் ஈடுபட்டுவரும் பெண் இராணுவ வீராங்கனைகள் அரை குறை ஆடைகள் அணிந்து, ஆபாசமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சமீபத்தில் இணையதளங்கள் மற்றும் சமூக இணையதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இராணுவத்தில் புதிதாக சேர்ந்த நான்கு இளம் பெண்கள் குறும்பாக தங்களது அரை நிர்வாண புகைப்படங்களை பேஸ்புக்கில் வெளியிட்டனர். அதில் அவர்கள் மேலாடை அணியாமல் தலைக் கவசம் மட்டும் அணிந்தபடியும், இடுப் புக்கு கீழே உள்ளாடை மட்டும் அணிந்தபடியும், கையில் துப்பாக கியுடனும் போஸ் கொடுத்துள்ளனர். இதற்காக அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. இந்நிலையில், மீண்டும் இது போல் பட்ங்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது மேலும் வீடியோ காட்சிகளும் வெளியாகி உள்ளது.

அந்த வீடியோ காட்சியில் அரை நிர்வாண நிலையில் ஆயுதம் அணிந்த நிலையிலும் நடனம் ஆடுகிறார். ஒரு இளம் வீராங்கனை. இந்த காட்சிகளில் 3 பெண்கள் இடம்பெற்று உள்ளனர். ஒருவர் மட்டுமே அரை நிர்வாண நிலையில் உள்ளார். இந்த வீடியோ 30 செக்கன்கள் ஓடக்கூடியதாக உள்ளது. இந்த படங்களும் இணைய தளங் கள் மற்றும் சமூக இணையதளங்களில் வெளியாகி பர பரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது இஸ்ரேலீ இராணுவத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்துவதாக அமைந்து உள்ளது ஏற்கனவே இப்படி படங்கள் வெளியானபோது நடவடிக்கை எடுத்தது போல் இஸ்ரேல் இராணுவம் மீண்டும் நடவடிக்கை எடுக்கும் எனத்தெரிகிறது.

## உடைகிறது பா.ஜ.க. கூட்டணி

# மூன்றாவது அணியை

### அமைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார் மேற்கு வங்க முதல்வர்



திரிணாமூல் காங்கிரஸ் கட்சித் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, வரும் மக்களவைத தேர்தலில் காங்கிரஸ், பாஜக அல்லாத மூன்றாவது அணி அமைப்பது குறித்து மாநில கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதுதொடர்பாக, பீகார் முதல்வர் நிதீஷ் குமார் மற் றும் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆகியோரை மம்தா புதன்கிழமை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு உரை யாடினார்.

பாஜகவின் பிரதமர் வேட் பாளராக குஜராத் முதல்வர் மோடியை அறிவிக்க வேண் டும் என்ற கருத்து கடந்த ஓராண்டாக நிலவி வருகி றது. இதற்கு ஐக்கிய ஜனதா தள கட்சியின் மூத்த தலை வரும் பீகார் முதல்வருமான நிதீஷ் குமார் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

இந்நிலையில், கோவா தலைநகர் பனாஜியில் சமீ பத்தில் நடைபெற்ற தேசிய செயற்குழு கூட்டத்தில், பாஜக தேர்தல் பிரசாரக் குழு தலை வராக நரேந்திர மோடி அறி விக்கப்பட்டார். இதன்மூலம் மோடிக்கு பிரதமர் வேட்பாள ராவதற்கான வாய்ப்பு அதி கரித்துள்ளதாகக் கூறப்படு கிறது.

பாஜகவின் இந்த முடி வால், கடந்த 15 ஆண்டுக ளுக்கும் மேலாக தேசிய ஜன நாயகக் கூட்டணியில் இடம் பெற்று வரும் ஐக்கிய ஜனதா தளம், கூட்டணியிலிருந்து விலக முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஓரிரு நாட்களில் இது குறித்த முறையான அறி விப்பு வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த சந் தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மம்தா மூன்றா வது அணி அமைப்பதற் கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

## வேற்றுக் கிரகவாசிகளால் ஆண்டுக்கு 1500 பேர் கடத்தப்படுகின்றனர்

வேற்றுக் கிரக வாசிகள் குறித்த தகவல் கள் அவ்வபபோது வெளியாகி வருகின் றன. இந்நிலையில், ஆண்டுக்கு 1,500 பேர் வேற்றுக் கிரகவாசிகளால் கடத்தப் படுவதாக இங்கிலாந்தைச் சேர்ந்த 'அம் மாச் ஆர்கனை சேசன்' என்ற அமைப்பு கூறியுள்ளது.


வேற்றுக் கிரகவாசிகளுடனான அனுப வத்தை பொதுமக்கள் பகிர்ந்துகொள்வ தற்காக கடந்த 2011ஆம் ஆண்டு அந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்த அமைப்பை தொடர்பு கொண்ட பலர், வேற்று கிரக வாசிகளால் தாங்கள் கடத்தப்பட்டதாக தெரிவித்தனர். ஒரு பெண், தான் ஆயிரம் தடவைக்கு மேல் கடத்தப்பட்டதாக தெரிவித்தார். அவர் களுக்கு 'அம்மாச்' அமைப்பினர் கவுன் சிலிங் அளித்தனர்.

## சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் 60 பேர் மரணம்!

கடந்த இரண்டு ஆண்டுகளாக உள் நாட்டு கலகத்தை எதிர்கொண்டுவரும் சிரியாவில், கிழக்குப்பகுதி டேர் எஸ்ஸர் மாகாணத்தில் உள்ள ஹட்லா கிராமத் தைச் சேர்ந்த ஷியா பிரிவினர் கிளர்ச்சியா ளர்களின் பாதுகாப்பு நிலை மீது நடத் திய திடீர் தாக்குதலில் இருவர் கொல்லப் பட் டனர்.

அதற்குப் பதிலடியாக, கிளர்ச்சியாளர் கள் அந்த கிராமத்தின் மீது நடத்திய தாக்குதலில் 60 பேர் கொல் லப்பட்டனா. இத்தகவலை [illegible] சிரியா கண்கா[illegible] அப்தெல் ரஹ்மான் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் தலைவனே...!





**1998 ஆம் ஆண்டு**
**பல இடர்களுக்கு மத்தியில்**
**சமுர்த்தி திட்டத்தை அமுல்படுத்திய**
**வடக்கின் தலைவனே!**

மக்களின் தலைவனே
மகத்தான தோழனே
வாழ்த்துக்கள் கோடி உமக்கு

எங்களின் வாழ்வினை
ஏற்றமாய் ஆக்கிட
வேலைகள் தந்தீர் எமக்கு




சமுர்த்தி வட்டத்துள்
சமயம் பார்த்தெம்மை
நுழைத்து விட்டதும் நீர்தானே..

சரிந்து போன எம்
வாழ்வின் நிலையினை
உயர்த்தி விட்டதும் நீர்தானே..

நன்றி சொல்லிட
வர்த்தைகள் இலை என்றே
நாங்களும் கவிகள் ஆனோம்

இன்று நேற்றல்ல
எங்களின் தேவாவை
இதயத் துடிப்பாய்க் கொண்டோம்



**புதிதாய் நியமனம் பெற்ற**
**சமுர்த்தி உத்தியோகத்தர்கள்**
**யாழ்ப்பாணம்.**

(B-3023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றிடம் வழங்கக்கோரி வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்கு முன்பாகவுள்ள அங்காடி வியாபாரிகள் தமக்கு மாற்றிடம் வழங்கக்கோரி நகரசபைக்கு முன்பாக நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, வவுனியா நடைபாதை வியாபாரிகளுக்கு என புதிய அங்காடி விற்பனை் நிலையமொன்று கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் நகரசபைக்கு முன்பாக அமைக்கப்பட்டு வவுனியா நகரசபையால் வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறு வழங்கப்பட்ட இடத்தில் தற்போது 40 வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

ஆனால், இவ்விடத்தில் நாள் ஒன்றுக்கு 200 ரூபாவுக் குக்கூட வியாபாரம் நடைபெறுவதில்லை. இதனால் அவர்கள் தமக்கு மாற்றிடம் வழங்குமாறு கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக பலமுறை நகரசபைக்கு தெரியப்படுத்திய போதும் எந்தவிதமான பதிலும் கிடைக்காமையான தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதாக அங்காடி வியாபாரிகள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நகரசபையே ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, எம்மையும் வாழ விடுங்கள், எமக்கு மாற்றிடம் வழங்கு போன்ற வாசக அட்டை களை ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை பதில் தலைவர் எம்.எம்.ரதன், ஆளுநரின் ஆணையாளர் முகைதீன், வவுனியா நகரசபை செயலாளர் க.சத்தியசீலன் மற்றும் நகரசபை உறுப்பினர்களான சிவகுமார், குமாரசாமி, செல்லத்துரை ஆகியோர் வருகைதந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் எதிர்வரும் புதன்கிழமை நகரசபைக் கூட்டத்தில் கலந்துரையாடி முடிவு கூறுவதாக நகரசபை நிர்வாகம் மற்றும் சபை உறுப்பினர்களால் உறுதி மொழியும் வழங்கப்பட்டது. (அ-3-250)

# கரைச்சி பி.செ. பிரிவில் இந்திய வீட்டுத்திட்டம்

## அமைக்கும் பணி துரிதம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இந்தியன் வீட்டுத்திட்ட வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் மலையாளபுரத்தில் 304, கிருஷ்ணபுரத்தில் 239, பொன்நகரில் 242, அம்பாள் நகரில் 370, இராமநாதபுரத்தில் 297, சிவிக்சென்ரர் கிராமத்தில் 58, மருதநகரில் 73, பன்னங்கண்டியில் 25, உருத்திரபுரம் வடக்கில் 155, பெரியபரந்தனில் 86 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான ஆரம்ப கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 36 வீடுகளின் கட்டுமானப் பணிகள் முழுமை பெற்றுள்ளன.

அத்துடன் கண்ணகைபுரம் கிராமம் வட்டக்கச்சி கிராம அலுவலர் பிரிவு ஆகியவற்றில் இம்மாத இறுதிக்குள் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-3-254)

# வீடு கட்டுவதற்கான மணலை பெற்றுக் கொள்வதில் சிரமம்

## பயனாளிகள் கவலை

(பூநகரி)

பூநகரி நல்லூர் கிராம சேவையாளர் பிரிவில் இந்திய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 365 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினமும் நேற்றும் அத்திவாரம் வெட்டப்பட்டு தொடர்ந்து கட்டுமான பணிகள் நடைபெறவுள்ளதாக நல்லூர் கிராம சேவை அலுவலர் அ.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம் மக்கள் வீட்டுக்குத் தேவையான ஆற்று மண்ணை பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடியை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

4 மாதங்களில் வீட்டுத் திட்ட வேலைகள்பூர்த்தியாக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்ட நிலையில் நாள் ஒன்றுக்கு ஒரு உழவு இயந்திரத்திற்கு ஒரு ஜீப் மண் மட்டும் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப் பட்ட நிலையில் ஒரு மாதத்திற்கு 240 லோட் மண் மட்டும் விநியோ கிக்க முடியும் என்று கனிய வளப் பகுதியினர் கட்டுப்பாட்டை வைத் துள்ளனர். இந்நிலையில் தேவையான மண்ணைப் பெறமுடியாது கொடுக்கப்பட்ட கால அவகாசத்தில் வீடுகளை அமைக்க முடியாத அவல நிலையில் பயனா ளிகள் உள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் வேண் டிய நடவடிக்கை எடுத்தல் அவசியம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-84)

# சித்தி விநாயகர் ஆலயத்தில் திருவிழா

வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. கொடியேற்றத்தன்று காலை 7 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு தர்மலிங்கம் வீதி ஊடாக பண்டாரிக்குளம் அம்மன் ஆலயம் சென்று வேட்டைத்திருவிழாவும் இடம்பெற்று குருமன்காட்டுச்சந்தி ஊடாக வைத்தியசாலை வீதியை வந்தடைந்து குடியிருப்பு கிராமத்தை விநாயகப் பெருமான் வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பரமும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர் வீதியுலா இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (அ-3-266)

# வட்டுவாகல் பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வெட்டு வாய்க்கால் பாலம் (வட்டுவாகல் பாலம்) 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது சிதைவடைந்து காணப்படுகின்றது.

முல்லைத்தீவில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு செல்வதற்கான பிரதான வீதியில் இப்பாலம் அமைந்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இப் பாலம் சொந்தமான வீதியால் தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவாகனங்கள் பயணிக்கின்றன.

இப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 3 வருடங்கள் கடந்த நிலையிலும் இப்பாலம் புனரமைக்கப்படவில்லை. இப்பாலமானது 290 மீற்றர் நீளமுடையதாகும்.

இப்பாலம் உள்ள வீதி இரண்டு வானங்கள் ஒரே நேரத்தில் பயணிக்க முடியாது குறுகியதாக காணப்படுகின்றது.

எனவே வீதியை விரிவுபடுத்தி பாலத்தைபுனரமைக்கமுன்வரவேண்டும். அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன் றை முன்வைத்துள்ளனர். (அ-3- 267)

# அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள 1 ஏபி, 1 சி, தரம் -2 பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் விழிப்புணர்வு செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறும்.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இவ் விழிப்புணர்வு செயலமர்வில் கருத்துரைகளை வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாசும் வடமாகாண உள சமூக வள நிலைய உதவி முகாமையாளர் ப. உதயகலாவும் வவுனியா தெற்கு வலய தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி ந. க. கிறேனியரும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு. சுபாஸ்கரனும் ஆற்றவுள்ளனர்.

பாடசாலைகளில் கடமையாற்றும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களின் கடமைகள், நியமனங்கள், தகுதிகள், பாடசாலைகளில் இனம் காணப்பட்ட உள சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு மதி செ. அன்ரன் சோமராஜா கேட்டுள்ளார். (அ-3-266)




# ஒற்றுமைக்கான நிகழ்வு

(சிவநகர்)

செங்கடகல மகாவித்தியாலய 75 மாணவர்களும் 25 பெற்றோர் ஆசிரியர்களும் இன கலாசார ஒற்றுமைக்கான நிகழ்விற்காக நேற்றைய தினம் கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலைக்கு வருகை தந்துள்ளனர்.

மூன்று நாட்கள் இங்கு தங்கியிருக்கும் இவர்கள் விளையாட்டுப் போட்டி மற்றும் கலாசார நிகழ்வுகளையும் நடத்தவுள்ளனர். (அ-3-254)





வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வினை தன்னைச் சுடும்
ஓட்டப்பம் வீட்டைச் சுடும்
-பட்டினத்தடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜே.ஆர்.கொண்டுவந்த யாப்புத்தான் ஐ.தே.கட்சியை குடிமுழுக வைத்தது

ஒரு பூஜ்ஜியத்திற்குள்ளே இராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன். அவனைப் புரிந்து விட்டால் அவன்தான் இறைவன்... என்ற கவியரசர் கண்ணதாசனின் பாடல் வரிகளின் கருத்தாழத்தை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால், நாங்கள் மறந்துபோய் உள்ள மகாசக்தியின் பேரருள் தெரியவரும்.

ஆனாலும் அதனைப்புரிந்து கொள்வதற்கும் தெரிந்து கொள்வதற்கும் எங்களிடம் முயற்சியும் இல்லை. முன்செய்தவமும் இல்லை.

இதன் காரணமாக எல்லாம் எங்களால் நடப்பதாக நாங்கள் நினைத்துக் கொள்கிறோம்.

இந்நினைப்புக்களுக்கு எல்லாம் அடிப்படை, காலம் நிலையானது என்ற மடைமைத்தனமான நம்பிக்கையாகும்.

இந்த உலகில் மாற்றம் ஒன்றுதான் மாற்றம் இல்லாதது என்று கூறுவார்கள்.

இந்த மாற்றத்தையும் நிகழ்த்தி வைப்பது காலமாற்றம் என்பதை புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

1978களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்டு வந்த ஜே.ஆர் .ஜெயவர்த்தன இன்று உயிரோடு இல்லை.

என்றோ ஒருநாள் தேகாந்தநிலை தனக்கு ஏற்படும் என்பதை அவர் தெரிந்து கொள்ளாமலும் இருந்திருக்க முடியாது.

அவ்வாறாயின் ஜனநாயகப் பண்பற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அவர் ஏன் கொண்டு வந்தார் என்றால், தனது பதவிக்காலத்தில், அனைத்து அதிகாரமும் தன்கையில் இருக்கவேண்டும் என்பதற்காகவாகும்.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு வந்த ஜே.ஆர் இரு தடவைகள் அந்த அதிகாரத்தில் அமர்ந்து ஆட்சி செய்தார்.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு வந்த ஜே.ஆரின் அன்றைய நினைப்பு எல்லாம் தான் கொண்டு வந்து இருக்கக் கூடிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை படுபாதாளத்திற்குள் தள்ளிவிடும்.

இனி எக்காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கையின் ஏகபோக ஆட்சி உரிமை கொண்டது என்று நினைத்தார். அந்த நினைப்போடுதான் அவரின் அரசியல் யாப்பும் அமைக்கப்பட்டது.

ஆனால் நடந்தது கறையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருந்ததாய் நிலைமை முடிந்து விட்டது.

தான் எடுக்கும் புற்று; தான் வாழும் இடத்தையும் அங்கு இருக்கக் கூடிய வளங்களையும் சிதைத்துவிடும் என்று கறையான் நினைத்து இருந்தால், கருநாகம் குடியிருக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்கும்.

ஆக, சுயலாபம் கருதியும் இன மதவாதம் நோக்கியும் நரித்தந்திரமாக செயற்பட்டால் அதில் மாட்டிக்கொள்ள வேண்டிவரும் என்பதற்கு இன்று கந்தறுந்து காவடியெடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி நல்ல சான்று.

தானும் தனது கட்சியும் வாழவேண்டும் என்பதற்காக கொண்டு வந்த சட்டமே அந்தக்கட்சியை அழித்தது என்றால் இதைவிட முன்னுதாரணம் வேறு தேவையிருக்காது.

இப்போது கூட ஆட்சியில் இருப்பவர்கள், தமிழ் மக்களுக்குப் பாதகத்தை உண்டு பண்ணும் சட்டங்களை இயற்றுகிறார்கள்- அதற்கான விளைவு எப்படி இருக்கும் என்பதை காலமாற்றம் நிச்சயம் வெளிப்படுத்தும் .

# தொண்டர் ஆசிரியர்களுக்கான தகைமைப் பரிசீலிப்புப் பரீட்சை

வவுனியா வடக்கு,கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, மடு ஆகிய வலயங்களிலும், வடமராட்சி வலயத்திலுள்ள மருதங்கேணிக் கோட்டத்திலும் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 539 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம்கிடைக்கப்பெற்றுள்ளது.

இவர்களுக்கான தகைமைகளைப் பரிசீலிப்பதற்கும் நியமனம் வழங்கும் பாடசாலைகளை உறுதிப்படுத்துவதற்குமான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 17-ம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி வலயத்தினைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களிற்கு வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சியிலும், 18-ம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு, துணுக்காய், மடு, வவுனியா வடக்கு ஆகிய வலயங்களினைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு மாங்குளத்தில் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகம், துணுக்காயிலும் 19-ம் திகதி புதன்கிழமை வடமராட்சி வலயத்திலுள்ள மருதங்கேணிக் கோட்டத்தினைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு கோட்டக் கல்வி அலுவலகம், மருதங்கேணியிலும் காலை 8.30 தொடக்கம் பி.ப 5.00மணிவரை நடைபெறவுள்ளது. இந்நேர்முகத்தேர்விற்கான அழைப்புக் கடிதங்கள் உரிய தொண்டர் ஆசிரியர்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்நேர்முகத் தேர்விற்கு சமுகமளிப்பவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றின் மூலப் பிரதிகள்,உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகள் என்பவற்றுடன் உரிய நேரத்தில் பங்குபற்றுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறியத்தந்துள்ளார். (செ)

# குடும்பஸ்தரின் உயிரிழப்புக்கு விபத்து காரணமல்ல

## பிரேத பரிசோதனை அறிக்கையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஊரதீவில் இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழக்க வில்லை என யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் மூலம் தெரியவந்துள்ளதோடு இவரது மரணத்திற்கு காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு வரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுதவிர அப்பகுதி மக்களிடம் தொடர்ந்து விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

புங்குடுதீவு கேரதீவை சேர்ந்த தம்பிப்பிள்ளை பரமேஸ்வரன் (வயது 54) என்ற குடும்பஸ்தர் கடந்த 9ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் புங்குடுதீவு, ஊரதீவு பகுதியில் ஆட்டோவில் உயி ரிழந்து கிடந்த நிலையில் சடலமாக ஊர்காவற்றுறை பொலிஸாரால் மீட் கப்பட்டிருந்தார்.

இவரது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்பிரேதபரிசோதனையினை யாழ்.போதனா வைத்தி யசாலையின் சட்ட அதிகாரி வைத்தியர் எஸ்.தனுசன் மேற்கொண்ட போது குறித்த குடும்பஸ்தர் விபத்தில் இறந்ததற்கான காயங்கள் எதுவு மில்லை என்பதனால் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணையின்போது சட்ட வைத்திய அதிகாரி யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸார் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

இதன்போது ஆட்டோ விபத்தில் உயிரிழப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு சட்ட வைத்திய அதிகாரி, மரண விசாரணை அதிகாரிஆகியோரால்பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்ததோடு அப்பகுதியைச் சேர்ந்தவர்களிடமும் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-6)

## மாணவன் மீது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவர் மீது இளைஞர் குழு ஒன்று தாக்குதலை மேற்கொண்டதில் மாணவன் படுகாயங்களிற்கு இலக்காகியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் 3-ம் வருட மாணவனான சந்திரசேகரம் விஜயானந் (வயது 23) என்பவரே தாக்குதலில் முகம் மற்றும் கைகளில் காயங்களிற்கு உள்ளானவராவர்.

குறித்த மாணவன் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் நல்லூர்ப் பகுதியை நோக்கியவாறு சிவன் அம்மன் கோயிலில் வீதி வழியாக தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தார்.

அச்சமயம் சுமார் 8 பேர் கொண்ட இளைஞர் குழுவினர் வீதியின் நடுவே வைத்து மாணவனை மறித்து மோட்டார் சைக்கிளிலிருந்து தள்ளி வீழ்த்தி உள்ளனர்.

பின்னர் மறைந்து வைத்திருந்த விக்கெட் தடிகளினால் மாணவனை சரமாரியாக தாக்கி விட்டு அவ்விடத்தில் இருந்துஅவர்கள்திரும்பிச்சென்றுள்ளனர்.

இத் தாக்குதலினால் நிலைகுலைந்து வீழ்ந்த மாணவன் அங்கு நின்ற பொது மக்களின் உதவியுடன் முதலுதவியைப் பெற்று வீடு திரும்பியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான மாணவனின் தரப்பிலிருந்து இச்சம்பவம் தொடர்பில் உரிய தரப்பினரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (செ-11)

## வெனிசுலா தூதுக்குழுவினர் அமைச்சர் விமலுடன் சந்திப்பு

வெனிசுலா நாட்டின் ஆசிய பிராந்தியங்களுக்கான வெளிநாட்டு உறவுகள் பணிப்பாளர் ஓரிட்டா கெட்டன்தூதுக்குழுவினர் அமைச்சர் விமல் வீரவன்சவை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் இலங்கையில் வீடமைப்பு திட்டங்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வெனிசுலாவிடம் இருந்து பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)




பற்றுகளை விட்டுநீங்குதல் கடினமாகும். அதிலும் குலமரபில் உள்ளவர்களுடைய தொடர்பை விடுவது எளிதல்ல என்பர். உலகியல் வாழ்வு பற்றுகளும் குற்றங்களும் நிறைந்ததென மணிவாசகர் கருதினார்.மணிவாசகர் இறைவன் தன்னுடைய சுற்றப் பற்றுகளை நீக்கி ஆட்கொண்டதாகக் கூறுகிறார். மணிவாசகர் திருமணம் செய்ததாக வரலாற்றுக் குறிப்பு எதுவுமில்லை. எனினும் குற்றங்கள் செய்ததையும் குறிப்பிட்டுள்ளார். வடநூல் மரபு, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என அறுவகைப்படுத்தியுள்ளது. இந்த அறுவகையை வள்ளுவர் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றினுள் அடக்கிக் கூறியுள்ளார். இத்தகைய குற்றங்கள் உலக வாழ்வியலில் இன்னும் மலர்ந்துள்ளன. அவற்றை நீக்க இறையருள் தேவை.

குற்றம் செய்த தன்னையே ஆட்கொண்டருளிய இறைவனுடைய ஆற்றலை நினைக்கும் மணிவாசகருக்கு முப்புரங்களையும் எரித்தது நினைவுக்கு வருகிறது. மேரு மலையையே வில்லாக வளைத்த பேராற்றல், அடுத்து இறைவன் திருக்கோலம் தெரிகிறது. பொன்னைப்போல மின்னுகின்ற அழகிய கொன்றை மலர்களால் ஆன அசையும் மாலையை அணிந்தவன். அழகிய அலர்ந்த செந்தாமரை மலர் போலும் திருமேனி. [illegible] கோலங்மகொண்ட இறைவனை உறவாகப் பாவனை செய்து எந்தையே அப்பா என்று உரிமையுடன் அழைக்கிறார். தந்தை, தாய், அப்பன், அம்மை என்னும் உறவுப்பெயர்கள் மணிவாசகருடைய பல பாடல்களிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. இறைவனுடைய ஒப்பில்லாத தன்மை அனைத்து உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாய் இருப்பதுவே.

தன்னுடைய உலகியல் துன்ப த்தை விளக்கும்போது ஓர் உவமையைப் பயன்படுத்தியுள்ளார். மத்து உறபொரு தயிரின் எனக்குறிப்பிடுவது மத்து வேகமாகச் சுழலும்போது மிகவும் அலைப்புண்டு கரையும் தயிரைப்போலத் துன்பப்படுவதை விளக்குவதாக உள்ளது. ஆணவம் முதலிய மலங்கள் ஐந்தால் சுழல்கின்றேன் எனக்கூறுகிறார். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என ஐந்து மலங்களையும் சிவஞானசித்தியார் குறிப்பிடுகிறது. மணிவாசகர் உவமையில் குறிப்பிடும் மத்தும் அடிப்பகுதியில் 5 பகுதிகளாகப் பிரிந்திருக்கும். அந்த மத்துச் சுழலும்போது வேகமாகத் தயிர்க்கட்டியைச் சிதைத்து உருத்தெரியாமல் ஆக்கும். இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்னரும் மலங்களின் சுழற்சிக்கு மணிவாசகர் ஆளாகுவது பிரிவின் நீட்சியைக் காட்டுகிறது. இறைவழிபாட்டைத் தொடராமல் உலகியல் வாழ்வில் நீண்டகாலம் இருப்பதால் மலங்களால் பீடிக்க நேரிடும் என்பதை மணிவாசகர் உணர்த்துகிறார்.

மணிவாசகருடைய வாழ்வியல் அனுபவம் எல்லோருக்கும் விளங்கும் தன்மையது.துன்பந்தீர மனிதர்களின் உதவியை எதிர்பார்ப்பதனால் பயனில்லை. அதனால் பற்றற்று வாழப் பயில வேண்டும்.நாளாந்த நடைமுறையில் வழிபாட்டுப்பயிற்சி இன்றியமையாதது. இறைவன் திருக்கோல அழகைக் காணும்போது அது ஒரு பற்றற்ற ஈடுபாட்டைத் தரும். மனிதர்களிடையே நாம்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

காணும் அழகில் கவர்ச்சியே ஏற்படும். அதனால் மனவுறுதி தளரும். இந்த அனுபவத்தை மணிவாசகர் நன்கு உணர்ந்தவர். எனவே மீண்டும் அந்நிலையை அடையாமல் தன்னைக்காக்கும் படி இறைவனிடம் வேண்டுதல் செய்கிறார். இறைவனையே எம்மைக்காக்கும் தந்தையாக எண்ணிவழிபட வைக்கின்றார்.

**குலங்களைந்தாய் களைந்தா யென்னைக்**
**குற்றங் கொற்றச் சிலையாம்**
**விலங்க வெந்தாய் விட்டிடுதி கண்டாய்**
**பொன்னின் மின்னு கொன்றை**
**அலங்கலந் தாமரை மேனியப்பா**
**ஒப்பில்லாதவனே**
**மலங்களைத்தாற் சுழல்வன்**
**தயிரிற் பொரு மத்துறவே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லசித் மலிங்க அபாயகரமானவர்

## இங்கிலாந்து அணி தலைவர் குக்

இலங்கை அணியின் சார்பாக அதிக அபாயத்தை வழங்குபவராக லசித் மலிங்க காணப்படுவதாக இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர் குக் தெரிவித்துள்ளார். அவரைச் சிறப்பாக ஆட வேண்டிய தேவையுள்ளதாக குக் தெரிவித்துள்ளார்.

லசித் மலிங்க மிகச் சிறப்பான பந்துவீச்சாளர் எனக் குறிப்பிட்ட அலஸ்ரெயர் குக், வித்தியாசமான பந்துவீச்சு முறையைக் கொண்டவர் என்பதில் மலிங்க முக்கியமானவர் எனக் குறிப்பிட்டார்.

லசித் மலிங்கவை எதிர்த்தாடுவது கடினமானது எனக் குறிப்பிட்ட அலஸ்ரெயர் குக், இலங்கையின் வெற்றிகளில் லசித் மலிங்கவின் பங்கு மிக முக்கியமானது எனக் குறிப்பிட்டார்.

## சாது மிரண்டால்..... தாடி வளரும்



விளையாட்டுக்குள்ளும் சாமியார் நுழைந்துவிட்டார் என்று யோசிக்கிறீர்களா..? ஆம்..... மினி உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் மோதிய ஆட்டத்தில் மிரட்டும் சாமியார் வேடத்தில் ஒரு ரசிகர் .

# சூது தொடர்கிறது

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 5 பேர் உத்தரப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டனர்.

இரகசியத் தகவலின் அடிப் படையில் ராம்பூர் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 7 கைபேசிகள், ரீவி, ரூபா 25 ஆயிரம் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


## சம்பியன்ஸ் கிண்ணம் இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா

Vs

மேற்கிந்தியத்தீவு

# கார் பந்தய வீரர் மரணம்



அமெரிக்க கார்ப்பந்தயப் போட்டியில் கரோலினாவைச் சேர்ந்த பிரபல கார் பந்தய வீரர் ஜான்சன் லெப்லெர் (வயது 37) கார் விபத்துக்குள்ளானதில் பரிதாபமாக மரணமடைந்தார்.

அமெரிக்காவிலுள்ள நியூ ஜெர்சி பகுதியில் மண்பாதை வழி கார் பந்தயம் நடைபெற்றது. இதில் ஜாசன் சென்ற கார் எதிர்பாராத விதமாக தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. பலத்த காயமடைந்த அவரை பிலடெல்பியா நகரிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவர் பரிதாபமாக இறந்தார். இவர் தேசிய கார் பந்தயங்களில் 2 முறை வென்று சாதனை படைத்தவர்.

# பிந்த்ராவுக்கு ஆதரவாக சுமதிபால கருத்து

2010ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற முக்கோணச் சுற்றுப்போட்டியின்போது இந்திய வீரர் தங்கியிருந்த ஹொட்டல் அறையில் இளம்பெண் ஒருவர் இருந்தார் என்று இந்திய கிரிக்கெட் சபை முன்னாள் தலைவர் ஐ.எஸ்.பிந்த்ரா கடந்த வாரம் எழுதிய இணையத்தள கட்டுரையில் கூறியிருந்தார்.

சூதாட்ட தரகர் மூலம்தான் அந்த பெண் ஹொட்டல் அறைக்கு அனுப்பப்பட்டதாகவும். இதுகுறித்து ஐ.சி.சி. விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் வெளியே தெரியாமல் இருக்குமாறு இலங்கை கிரிக்கெட் சபையை இந்திய கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டதாகவும் பிந்த்ரா தெரிவித்தார். இதை இலங்கை கிரிக்கெட் சபை மறுத்திருந்தது.

இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரும், எம்.பி.யுமான திலங்கா சுமதி பாலா, பிந்த்ராவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து சுமதிபாலா கூறுகையில்,

இந்திய வீரர் இருந்த ஹொட்டல் அறையில் இளம்பெண் ஒருவர் இரவு முழுவதும் தங்கினார். நான் இந்த விடயத்தை இலங்கை பாராளுமன்றத்தில் எழுப்புவேன். ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு பிரிவு இதுகுறித்து விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

இந்த விவகாரம் கண்காணிப்பு கமரா மூலமே தெரியவந்தது. தமுல்லாவில் உள்ள அந்தமாலா ஹொட்டலில் கண்காணிப்பு கமரா இருந்தது. இந்திய வீரரின் அறைக்கு இளம்பெண் வந்து சென்றதும் இரவு 10.45 மணி முதல் காலை 6 மணி வரை வீரரின் அறையில் அந்த இளம்பெண் தங்கி இருந்தமையும் கமராவில் பதிவாகியிருக்கிறது.

# மெஸ்ஸி மீது வரி மோசடி குற்றச்சாட்டு



ஆர்ஜென்டீனாவின் பிரபல காற்பந்தாட்ட வீரர் லயோனல் மெஸ்சி மீது வரிமோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த எப்சி பார்சிலோனா .லா லிகா சங்கத்திற்கான அணியில் முன்கள வீரராகவும் விளையாடுகின்றார். 25 வயதான மெஸ்சிக்கு ஸ்பெயினின் பார்சிலோனாவில் அளிக்கப்படும் ஆண்டு சம்பளம் 16 மில்லியன் யூரோக்கள்.

இந்நிலையில், கடந்த 2007-09ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் வரி மோசடி செய்துள்ளதாக மெஸ்சி மீதும், அவரது தந்தை ஜோர்ஜ் ஹோரைசியோ மீதும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவர்கள் இருவரும் பெலிஸ், உருகுவே போன்ற அயல்நாட்டு நிறுவனங்களுக்கு மெஸ்சியின் புகழைப் பயன்படுத்தும் உரிமையை விற்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு செய்வதன்மூலம் அவர்கள் ஸ்பெயினில் 4 மில்லியன் யூரோவிற்கு மேல் வரி கட்டாமல் தவிர்த்து வந்தனர் என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

இது குறித்து அரச சட்டத்தரணி ரக்கெல் அமடோ, பார்சிலோனா மாவட்டத்தில் உள்ள கவா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

பார்சிலோனா மாவட்டத்தில் தான் மெஸ்சி வாழ்ந்து வருகின்றார். இந்த மனுவில் கூறப்பட்டுள்ள புகாரை முதலில் நீதிபதி ஏற்றுக் கொண்டால்தான் குற்றவாளி விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார். குற்றம் நிரூபிக்கப்பட்டால், மெஸ்சி அதிக அபராதத் தொகையுடன், சிறைத் தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்று கூறப்படுகிறது.

# நான் தவறு செய்யவில்லை – ஸ்ரீசாந்த்



நான் தவறு செய்யவில்லை என்பதை நிரூபித்து மீண்டும் இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாடுவேன் என்று ஸ்ரீசாந்த் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட ஸ்ரீசாந்த் 27 நாட்கள் சிறைவாசத்துக்குப் பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து தனது சொந்த மாநிலமான கேரளத்தில் தனது பெற்றோர் மற்றும் உறவினர்களைச் சந்தித்த பின் செய்தியாளர்களிடம் கூறும்போது,

பெற்றோரிடம் திரும்பி வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. விரைவில் எனது பயிற்சியைத் தொடங்குவேன். கிரிக்கெட் விளையாடுவது தான் எனது கனவு. கிரிக்கெட்டுக்கு வந்த முதல் நாளிலிருந்து சிறந்த பங்களிப்பை அளித்து வருகிறேன். என்னை நீங்கள் நம்ப வேண்டும். நீதித்துறை மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன். தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் விளையாட ஆவலுடன் உள்ளேன். ஆனால் அது குறித்து தற்போது எதுவும் தெரிவிக்க முடியாது என்றார்.

ஐபிஎல் சூதாட்டம் குறித்த கேள்விக்கு, நான் தவறு செய்யவில்லை. வெறும் குற்றச்சாட்டினால் நான் கைது செய்யப்பட்டேன். இதிலிருந்து விரைவில் வெளிவருவேன். நல்ல முடிவு வரும் என்று நம்புகிறேன் என்றார்.

எனக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு அளித்தனர். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். யாரையும் குற்றம் சாட்ட விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார்.

திகார் சிறை அனுபவம் குறித்த கேள்விக்கு அவர் பதில் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

### நீதியின் மீது நம்பிக்கை:

சூதாட்ட குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக் கப்பட்ட மற்றொரு வீரர் அங்கித் சவாண் கூறுகையில்,

கஷ்டமான காலத்தில் என்னுடன் இருந்த எனது பெற்றோர், நண்பர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். நீதித்துறை மீது எனக்கு முழு நம்பிக்கை உண்டு. அதனால் சரியான தீர்ப்பு வரும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

சவாணின் திருமணத்துக்காக சில நாட்களுக்கு முன்னர் சவாண் பிணையில் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை வீழ்த்தியது இலங்கை

சங்கக்காரவின் அபார சதத்தின் உதவியுடன் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதன் நேற்றைய ஆட்டத்தில் போட்டியை நடத்தும் இங்கிலாந்து அணி, இலங்கை அணியை சந்தித்தது.

இப் போட்டி கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் முடிபு இங்கிலாந்து அணிக்கு சார்பானால் அரையிறுதியை உறுதிப்படுத்துவதுடன் மாறாக இலங்கை அணிக்கு அரையிறுதி வாய்ப்புக்கான முதற்படியை உருவாக்கும் என்ற முனைப்புடன் இரு அணிகளும் களமிறங்கினர்.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடி ஷயது.

அவ்வணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக குக் - பெல் களமிறங்கினர்.

இருவரும் இணைந்து நிதானமாக ஆடி தமக்கிடையில் 48 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த வேளையில் பெல் 20 ஓட்டங்களுடன் எரங்க பந்தில் பெரேராவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பெல்லின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களம்புகுந்த ரொட், குக்குடன் இணைந்து இலங்கை பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சை விளாசித் தள்ளினார்.

இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது. இருவரும் அடுத்தடுத்து அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தனர்.

இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 131 ஆக இருந்த வேளை குக் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ஜே ரூட், ரொட்டுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். ரொட் 86 பந்துகளில் 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஜோ ரூட்டின் சிறப்பான ஆட்டத்தினாலும், இறுதிக் கட்ட ஓவர்களில் போபாரா காட்டிய அதிரடியாலும் இங்கிலாந்து அணி 50 ஓவர்களின் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களை எடுத்தது,

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஜோ ரூட் 55 பந்துகளில் 68 ஓட்டங்களையும், போபாரா 13 பந்துகளில் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.


இலங்கை அணியின் பந்துவீச்சில் மலிங்க, எரங்க, ஹேரத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

294 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றியிலக்குடன் தமது துடுப்பாட்டத்தைத் தொடர்ந்து இலங்கை அணி சங்கக்காரவின் சிறப்பான சதம், குலசேகரவின் அதிரடியான அரைச்சதத்தின் உதவியுடன் 47.1 ஓவர்களில் 3 விககெட்டுக்களை இழப்பிற்கு தனது வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சங்கக்கார ஆட்டமிழக்காமல் 134 ஓட்டங்களையும், குலசேகர ஆட்டமிழக்காமல் 58 ஓட்டத்தினையும், டில்சான் 44, ஜெயவர்த்தன 42 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அண்டர்சன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் சங்கக்காரா தெரிவானார்.




## சிறுவர்...

வர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது எனவும் ஐ.நா. சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் 2012இல் எந்தவொரு தரப்பும் சிறுவர்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தவில்லை. இதன் அடிப்படையில் நேபாளமும் இலங்கையும் இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக இந்த அறிக்கை கூறியுள்ளது. (செ-11)

## ஆயுதப் போரா...

ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் "நல்லிணக்கத்தில் உயர்கல்வியின் பங்கு" என்ற தொனிப்பொருளிலான இருநாள் செயலமர்வு நேற்றுக்காலை யாழ். கீறின் கிராஸ் கோட்டலில் ஆரம்பமானது. இதில் கலந்துகொண்ட அவரிடம் செயலமர்வு குறித்து ஊடகவிலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையல்

அரசியல் பிரச்சினை ஆரம்பித்த காலம் தொடக்கம் அதாவது கடந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இனங்களுக்கிடையில் பல முரண்பாடுகளும் கலவரங்களும் ஏற்பட்டுள்ளன.இதன்போது பலர் பாதிக்கப்பட்டனர்.

இதனைவிட யுத்தத்தில் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாக பலதமிழர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஆயிரம் ரூபா கூட கொடுக்காத அரசாங்கம் போரிலே காயமடைநத இராணுவம் உள்ளிட்ட படையினர்க்கு 50 ஆயிரம் ரூபாவிற்கு மேல் உதவித்தொகை வழங்கி வருகிறது.

இவற்றை மூடி மறைத்துவிட்டு "நல்லிணக்கத்தில் உயர்கல்வியின் பங்கு"என செயலமர்வு நடத்துவதால் . இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படாது. தேசிய நல்லிணக்கம் எப்போது வருமென்றால் இனங்களுக்கிடையில் பரஸ்பரம் ஒற்றுமைப்பட்டு சமமாக நடத்தப்படும்போதுதான் ஏற்படும் .

தற்போது தேசிய நல்லிணக்கத்தை நோக்கியா நாடு செல்கிறது? தமிழ் மக்களின் காணிகளை 6 ஆயிரம் ஏக்கர் 7 ஆயிரம் ஏக்கர் என அபகரிக்கின்றர். அதில் சிங்களக் குடியேற்றங்களை செய்வதோடு பௌத்தவிகாரைகளையும் இராணுவப்படை முகாம்களையும் அமைத்து வருகின்றனர் இப்படியிருக்கும்போது தேசிய நல்லிணக்கம் எப்படி ஏற்படும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (செ-6)

## வடமாகாண தேர்தல்...

வாக்கெடுப்பு நடத்தப்பட்டது உத்தரவாதம், வாக்காளர்களின் விருப்பத்தை சுதந்திரமாக வெளிப்பாடுத்தும் தேர்தலாக இருக்க வேண்டும்.

வடக்கில் இராணுவம் மற்றும் பிரதான கட்சி அரசியல்வாதிகளிடையே ஏற்படும் மோதல் இதனை உறுதி செய்கிறது. இதனால் வடக்கில் சுதந்திரமான, நீதியான தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கை குறைந்துள்ளது.

வடக்கு தேர்தலின் போது ஐ.நா மனித உரிமை சர்வதேச பிரகடனததை செயற்படுத்துமாறு எதிர்க் கட்சி என்ற அடிப்படையில் கேட்டுக் கொள்கிறோம்.

வடமாகாண சபைத்தேர்தலுககு முன்னர் தீர்க்கப்படவேண்டிய நான்கு விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

01. அரசியலமைப்பின் 18வது திருத்தத்தை ரத்து செய்து 17வது திருத்தத்தை செயற்படுத்தல்.

02. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைப்படி பொலிஸ் சேவை மற்றும் அனைத்து பொலிஸாரும் சுதந்திரமாக செயற்பட உயர் தொழில் தரத்தை நிலைநாட்ட ஆணைக்குழுவை பலப்படுத்தும் வகையில் அதிகாரம் வழங்க வேண்டும்.

03. இராணுவ அதிகாரியான வடக்கு ஆளுநர் நீக்கப்பட்டு உடன் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து கட்சிகளும் ஏற்கும் சிவில் நபர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

04. வேட்பு மனு தினம் தொடக்கம் முடிபு அறிவிக்கப்பட்டு ஒரு வார காலத்திற்கு அனைத்து தேர்தல் நடவடிக்கைகளையும் கண்காணிக்க பொதுநலவாய சபை கண்காணிப்பு குழுவை அழைத்தல்.

இவை குறித்து கலந்துரையாட எனது தலைமையில் விசேட குழுவிற்கு வாய்ப்பளித்தால் சிறந்தது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சி தலைவரினால் கடந்த புதன்கிழமை கடிதம் எழுதப்பட்டதாகவும் பதிலெதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை என்றும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (செ-11)

## மாகாண சபைகளை இணைக்...

சைக்குரிய விடயங்களையும் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராயும்.

இந்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அமைப்பதற்கான கோரிக்கையை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை, ஜூன் 18ஆம் திகதி நாடாளுமன்ற சபாநாயகரிடம் அரசாங்கம் முன்வைககும்.

அரசின் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய வாராந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இதனை அறிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் வரக்கூடிய ஜனாதிபதிகள் கூட தமிழர்களின் தாயகமாக கொள்ளப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைப்பதற்கான வாய்ப்புக்களை அமைச்சரவையின் இந்த தீர்மானம இல்லாமல் செய்வதாக ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

**டக்ளஸ் தேவானந்தா பேடடி**

மாற்று மீடியா வடிவில் இயங்க

13வது சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் மாகாணங்கள் ஒன்றிணைவதற்கு இருந்த அதிகாரத்தை ரத்து செய்யும் ஒரு புதிய சட்டத்திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தவும், மாகாண சபைகளின் சில அதிகாரங்களை மட்டுப்படுத்தும் பிற திருத்தங்களை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அனுப்பவும் முடிவு செய்திருப்பது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து தெரிவிக்கையில், அமைச்சரவை கூட்டத்துக்கு தன்னால் போக முடியவில்லை என்றும், ஆனால், இந்த திருத்தங்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வரும்போது, தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கப் போவதாகவும் கூறினார்.

மாகாணங்கள் இணைவு இனிமேல் கடினமாக்கப்படுவது குறித்து கருத்து தெரிவித்த அவர், இது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல பிற மாகாணங்களுக்கும் பொருந்தும் என்றார். ஆனாலும், இனப் பிரச்சினைக்கு தீர்வாக, சிறுபான்மை இனங்கள் வசிக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஓரளவாவது அதிகாரங்களைத் தந்த 13வது சட்டத்திருத்தத்தில் அரசு கைவைப்பது ,இந்த இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்காதா என்று கேட்டதற்கு பதிலளித்த அவர், கிடைத்த வாய்ப்புகளை நழுவவிட்ட தமிழ்த் தலைமைகளும் இதற்குப் பொறுப்பு என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து**

அமைச்சரவையின் இந்த முடிவை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கடுமையாக எதிர்த்திருக்கிறார். வடக்கு கிழக்கு மாகாணங் களின் இணைப்பு என்பது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலக் கல் என்று கூறும் அவர், இந்த முடிவு வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதை நிராகரிக்கின்றது என்று குற்றஞ் சாட்டுகிறார்.

வடக்கு, கிழக்கு மக்கள் தாம் இணைந்து வாழ்வெதென நினைத்தாலும் அதனை எதிர்காலத்தில் செய்யாதவாறு தடுக்கும் இந்த முடிவு ஒரு சர்வாதிகார முடிவு என்றும்,

13வது சட்டத்திருத்தத்தில் உள்ளவற்றை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட எந்த வொரு நாடாளுமன்ற தெரிவுக் குழுவையும் தாம் நிராகரிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நாளை...

ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாக மூடப்பட்டுபின்யுத்தம்முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து 2009ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் திறக்கப்பட்டது.

சீனநாட்டு அரசுடன் செய்து கொள்ளப்பட்ட பல மில்லியன் ரூபாய் செலவிலான ஏ9 வீதி புன ரமைப்பு 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவடைந்த நிலையில் அவ் வீதியை ஜனாதிபதி சம்பிரதாய பூர்வமாக மக்களிடம் கையளிக்கவுள்ளார்.

ஏ9 வீதியை புனரமைப்பு செய்த சீன நாட்டு ஒப்பந்த நிறுவனம் இவ் வீதி திறப்பு நிகழ்வை முன்னிட்டு 500 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள ஆரம்ப கல்வி பாடசாலைகள் மூன்றிற்கு சிறுவர் நூல் நிலையத்திற்குரிய தளபாடங்களையும் நூல்களையும் அன்றையதினம் அன்பளிப்பு செய்யவுள் ளது.

ஏ9 வீதி திறப்புவிழா நிகழ்விற்கு வருகை தரும் ஜனாதிபதி கிளிநொச்சி நகரில் பல மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் வங்கிக்கட்டிடத்தையும் இரணை மடுவில் அமைக்கப்பட்டுள்ள விமானத் தளத்தையும் திறந்து வைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இந் நிகழ்வின் போது பல்துறை சார்ந்த அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் உட்பட பெருமளவிலானோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-3,15)

பிந்திய அதிரடி வரவு
IELTS தேவையில்லை
ஆஸ்திரேலியாவில் படிக்க உழைக்க
3 மாதங்களில் செல்லலாம்
சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0212219016
(C-3616)

ஐரோப்பிய நாடான சைப்பிரசிற்கு 50 -வது நபராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3-ம் வருட மாணவன் திரு.கோகுலராசா மதுசன் STUDENT VISA பெற்றார்

- நீர்வேலி வடக்கு, நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த திரு.கோ.மதுசன் திசைகாட்டியின் வழிகாட்டலில் மேற்படி விசா பெற்றுள்ளார்.
- யாழ்.பல்கலைக்கழக உள்வாரி மாணவர் ஒருவர் எமது நிறுவனத்தூடாக முதன்முறையாக விசா வென்றுள்ளமையை மிக்க பெருமையோடு அறியத் தருகின்றோம்.
- அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் உச்ச கல்வி நிலையடைந்த பின்னர் ஊர் திரும்பி எமது பிரதேச முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட வேண்டுமென அவாவி நிற்கின்றோம்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016,
021 568 9090
(C-3615)

# இராணு...

ஆணையாளரும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணை யாளருமான பி.அச்சுதனிடம் முறையிட்டு வந்த நிலையில் இது தொடர்பில் தேர்தல் திணைக்கள ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு வடக்கு மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து இராணுவத்தினருக்கு வாக்காளர் பெயர் பட்டியலை கொடுக்கத் தேவையில்லை என தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல்கள் வடக்கிலுள்ள உதவித்தேர்தல்கள் திணைக்களம் ஊடாக கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவந்துள்ளது. (சே-6)

# 536 பேருக்கு சிற்றூழியர் நியமனம் அமைச்சர் டக்ளஸ் இன்று வழங்குவார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கல்வி, விவசாயம், சுகாதாரம் ஆகிய திணைக்களங்களில் யாழ்.மாவடடத்தைச் சேர்ந்த 284 பேருக்கும் வன்னி மாவட்டத்தை சேர்ந்த 252 பேருக்கும் சிற்றூழியர் நியமனம் இன்று வழங்கப்படவுள்ளது.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின், கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (செ)

# பயங்கரவாதத்தை...

சரவதேச பாடசாலையின் பேராசிரியர் கலாநிதி ரொகான் குண ரட்ண யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கிலும் சரி தெற்கிலும் சரி சிறு குழுவினரே பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகவும் பயங்கரவாதம் வளர்வதற்கு தமிழ் மக்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கியிருந்த அதேவேளை தென்னிலங்கையில் ஜே.வி.பி. போன்ற ஆயுதக்குழுக்கள் உருவானபோது மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததர்கவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் நல்லிணக்கத்தில் உயர் கல்வியின் பங்கு என்ற தொனிப் பொருளிலான இருநாள் செயலமர்வு நேற்றுக்காலை யாழ்.கீறின் கிராஸ் ஹோட்டலில் ஆரம்பமானது. இதில் கலந்து கொண்டு பயங்கரவாத செயற்பாடுகளில் இருந்து சமூகம் மீள் எழுச்சி என்ற கருப்பொருளில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாத செயற்பாடுகளினால் நாட்டின் வளங்கள் அழிக்கப்பட்டதோடு அபிவிருத்திப்பணிகளும் முடக்கப்பட்டிருந்தன. அதுதவிர தேவையற்ற உயிரிழப்புக்களும் ஏற்பட்டன.

பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் என தனது உரையில் குறிப்பிட்ட பேராசிரியர் ரொகான் குணரட்ண இந்த நாட்டிலுள்ள இனங்களுக்கடையில் முரண்பாடு ஏற்பட தனிச்சிங்களச் சட்டம் தான் காரணம் என முன்னாள் பிரதமர் சிறி மாவோ பண்டார நாயக்க கூட ஒத்துக்கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இந்த செயலமர்வில் இலங்கை பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள், யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பீடாதிபதிகள், ஏனைய துறைசார்ந்த பலரும் பங்கு கொண்டிருந்தனர். (செ-6)

# கிளி.நாச்...

பிடிககும் வரைக்கும் மூன்று நிரந்தர மாடிக் கட்டடம் அமைக்கும் வரைக்கும் தமக்குத் தெரியாது எனக் கூறும் பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர், பிரதேச சபை த்விசாளர், செயலாளர் ஆகியோரால் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக பத்து அடி நிலத்தை அந்த ஊரை நிரந்தரமாகக் கொண்ட ஏழைகள் பிடித்த போது அதனைத் தடுக்க முடிந்துள்ளது.

இது தொடர்பாக அவ்வூர் மக்களும் சிறு தொழில் வர்த்தகர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சறிதரனின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

அவர் நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளார். இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கருத்துக் கூறும் போது, இது ஒரு மிக மோசமான காரியம். நாச்சிக்குடா மண்ணுக்குச் சொந்தமானவர்கள் புறக்கணிக்கப்பட்டு போலி ஆவணங்களைக் காட்டி வேற்றிடத்தவர்களுக்கு அந்த இடத்தில் கட்டடம் அமைத்துக் கடை, மரக்காலை, பேக்கரி அமைக்க உதவியமை, போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறி தொழில் இல்லாமல் இன்றும் இராணுவ அடக்கு முறைக்குள் வாழும் மக்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் செய்யும் பாரிய துரோகம் எனக் குறிப்பிட்டதோடு இது தொடர்பாக உரியவர்களுக்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கடித மூலம் தான் கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (செ-6)

தொழில்முறை மற்றும் பட்டப்படிப்பகம்
SCHOOL OF PROFESSIONAL AND DEGREE STUDIES [Pvt] Ltd
நுண்ணறிவு பயிற்சி வகுப்புக்கள்
தேசிய மற்றும் மாகாண ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக் கான
நுண்ணறிவுபயிற்சி வகுப்புக்கள் 16.06.2013 முதல் பிரதி ஞாயிறு தோறும்
பயிற்சியாளர்:. க.கனகரட்ணம் (முன்னாள் உதவிச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு)
பெயர்களைப் பதிவு செய்ய
தொழில்முறை மற்றும் பட்டப்படிப்பகம்
SCHOOL OF PROFESSIONAL AND DEGREE STUDIES [Pvt] Ltd
65, Amman Road, Kantharmadam, Jaffna.
E-mail : spads.edu@gmail.com Web : www.spads.edu.lk
Phone : + 94 21 221 9793 Hotline: 0777184410
(C-3614)

ACS TECHNOLOGY SYSTEM
1st MILE POST JUNCTION,
POINT PEDRO.
ஆசிரியர்களுக்கான SLEAS திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன...
- நுண்ணறிவு
- விடய ஆய்வு
- கிரகித்தல்



அனுபவமுள்ள விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது
கையேடுகள் வழங்கப்படும்
காலம் : 16.06.2013 ஞாயிற்றுக் கிழமை
நேரம் : காலை 9.00 மணி மற்றும் மாலை 3.30 மணி
மேலதிக விபரங்களுக்கு :- 0783035181
0778064705
(3036)

BARNABAS
இன் மலிவு விற்பனை
Sony Japan Wega TV கள்
14' Sony Wega Flat 15,000/- 8,990/-
21' Sony Wega Flat 21,000/- 11,990/-
29' Sony Wega Flat மலிவு விலையில்
sale
Japan, AMP Box
Pineyer மலிவு விலையில்
11990/- இலிருந்து
5,900/- 4,100/-
T.P : 0776479299
245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
(C-3588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.